Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

இன்றைய நாகரீகம்! நாளைய நாகரீகம்!

மகாராசி சில்க்ஸ்

மங்கல நிகழ்வுகளுக்கு மகாராசியான ஸ்தாபனம்

மகாராசி சில்க்ஸ்

59, நவீனசந்தை உட்புறம், யாழ்ப்பாணம்.

T.P.No : 0777286247.

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆடி 28 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ஜ.ஆகிர் 23 (11.08.2004) புதன்கிழமை இதழ் :313

## அரசாங்கத்துக்குள் முரண்பாடுகள் அதிகரிக்கிறது

# ஜே.வி.பி.யினரைச் சந்திக்க ஜனாதிபதி சந்திரிகா மறுப்பு!



## நேற்று நடைபெறவிருந்த கூட்டமும் ரத்து

(கொழும்பு)

**ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் ஜே.வி.பிக்கும் பொ.ஐ.முன்னணிக்கும் இடையிலான முரண்பாடுகள் அதிகரித்துள்ள நிலையில் –**

**நேற்று ஜனாதிபதி மாளிகையில் நடைபெற ஏற்பாடாகியிருந்த ஜே.வி.பியினருடனான சந்திப்பை திடீரென ஜனாதிபதி சந்திரிகா ரத்து செய்துள்ளார்.**

**ஜனர்திபதி சந்திரிகாவின் இந்தத் திடீர் நடவடிக்கையால் ஜே.வி.பியினர் குழப்ப மடைந்துள்ளதுடன் கொழும்பு அரசியல் வட்டாரங்களிலும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.**

ஜனாதிபதி சந்திரிகா, ஜே.வி.பி தலைவர்களை சந்திக்க மறுத்த காரணத்தால் நேற்று மாலை ஜனாதிபதிக்கும், ஜே.வி.பி தலைவர்களுக்குமிடையே நடைபெறவிருந்த சந்திப்பு இறுதி நேரத்தில் ரத்துச் செய்யப் பட்டது.

தனக்கு கடும் வேலை உள்ளதால் ஜே.வி.பி தலைவர்களை சந்திக்க முடியாமல் இருப்பதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஜே.வி.பி தலைவர்களுக்கு தெரிவித்தார்.

இதனையடுத்து பிறிதொரு சந்திப்புக்கான நேரத்தினை ஒழுங்கு செய்துதருமாறு ஜே.வி.பியினர் கேட்டபோதும் அதற்கு ஜனாதிபதி, வேலையற்று இருக்கும்போது இதற்கான அறிவிப்பை தெரியப்படுத்துவாரென ஜனாதிபதியின் தனிப்பட்ட செயலாளர் ஜே.வி.பியினருக்கு அறிவித்தார்.

நேற்று நடைபெறவிருந்த சந்திப்பில் - சமாதான முயற்சிகளை மீள ஆரம்பித்தல், விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகார சபை மற்றும் இருகட்சிகளுக்குமிடையிலான தொடர்புகள் குறித்து கலந்துரையாடப்பட இருந்ததாக செய்திகள் தெரிவித்தன.

## ஈ.பி.டி.பி. உறுப்பினர் திருமலையில் சுட்டுக்கொலை!

திருமலை நகரில் நேற்றிரவு ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஒருவர் இனந் தெரியாதோரால் சுட்டுக்கொல்லப் பட்டார்.

திருமலை திருஞானசம்பந்தர் வீதியில் வசித்த ஆத்மலிங்கம் ரமணி (பாண்டியன் வயது -49) என்ற ஈ.பி.டி.பி. உறுப்பினரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

நேற்றிரவு 9.25 மணியளவில் இவர் வீட்டு முற்றத்தில் இருந்த போதே துப்பாக்கிச் சூடு நடத்தப் பட்டது. இவர் மீது நான்கு தடவைகள் சுடப்பட்டதாகவும் அவர்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## களுவாஞ்சிக்குடியில் சூடு நேற்றிரவு ஒருவர் உயிரிழப்பு!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள களுவாஞ்சிக்குடியில் நேற்றிரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் கொல்லப் பட்டார்.

நேற்றிரவு 7.20 மணியளவில் இனந்தெரியாதோர் நடத்திய துப்பாக்கிச் சூட்டிலேயே, சீனித்தம்பி யோகராஜா என்பவர் உயிரிழந்ததாகத் தெரியவருகிறது.

இனந்தெரியாதோர் இவர் மீது துப்பாக்கிச்சூட்டை நடத்திவிட்டு தப்பிச்சென்றதாகத் தெரியவருகிறது. காயமடைந்த மேற்படி நபர் களுவாஞ்சிக்குடி வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டபோது -

(12 ஆம் பக்கம் பார்க்க)

காரணத்தால் நேற்று மாலை ஜனா திபதிக்கும், ஜே.வி.பி தலைவர்களுக்கு மிடையே நடைபெறவிருந்த சந்திப்பு இறுதி நேரத்தில் ரத்துச் செய்யப் பட்டது.

தனக்கு கடும் வேலை உள்ள

திபதி சந்திரிகா குமாரதுங்க ஜே.வி.பி தலைவர்களுக்கு தெரி வித்தார்.

இதனையடுத்து பிறிதொரு சந் திப்புக்கான நேரத்தினை ஒழுங்கு செய்துதருமாறு ஜே.வி.பியினர்

கான அறிவிப்பை தெரியப்படுத் துவாரென ஜனாதிபதியின் தனிப் பட்ட செயலாளர் ஜே.வி.பியின ருக்கு அறிவித்தார்.

நேற்று நடைபெறவிருந்த சந் திப்பில் -

களால் முன்வைக்கப்பட்ட இடைக் கால தன்னாட்சி அதிகார சபை மற்றும் இருகட்சிகளுக்குமிடை யிலான தொடர்புகள் குறித்து கலந்துரையாடப்பட இருந்ததாக செய்திகள் தெரிவித்தன.

தப்பிச்சென்றதாகத் தெரியவருகிறது. காயமடைந்த மேற்படி நபர் களு வாஞ்சிக்குடி வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டபோது -

(12 ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் காலவரையின்றி நேற்று மூடப்பட்டது!

## பாதுகாப்பு அச்சுறுத்தலே காரணம்



(கொழும்பு)

கொழும்பிலுள்ள இலங்கைக் கான அமெரிக்கத் தூதரகம் நேற்று நண்பகல் திடீரென - காலவரை யறையின்றி மூடப்பட்டதுடன், அங்கு பணியாற்றியவர்கள் அவசர அவசர மாக வெளியேற்றப்பட்டனர்.

பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்பட்ட தன் காரணமாகவே தூதரகத்தைத் திடீரென மூடவேண்டிய நிலை ஏற் பட்டதாக அமெரிக்கத் தூதரகப் பேச்சாளரான கிறிஸ்லோஸ் தெரி வித்தார்.

அவர் இது தொடர்பாக தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கை யில் -

நிர்வாக மற்றும் பாதுகாப்புக் காரணங்களுக்காகவே தூதரகம் நேற்று நண்பகல் முதல் காலவரை

(12 ஆம் பக்கம் பார்க்க)

# அகதிகளை பாதுகாப்பாக அழைத்துவர யு.என்.எச்.சி.ஆர். உதவவேண்டும்!


## வதிவிடப்பிரதிநிதிகளிடம் தமிழ்ச்செல்வன் கோரிக்கை

தமிழகத்தில் தங்கியுள்ள ஈழத்தமிழ் அகதிகள் பாதுகாப்பற்றதும், ஆபத்து நிறைந்ததுமான கடற் பயணத்தை மேற்கொண்டு தாயகம் திரும்புகின்றனர்.

எனவே இவர்கள் பாதுகாப்பான முறையில் தாயகம் திரும்புவதற்கு மனிதநேய அடிப்படையில் ஐ.நா.வின் அகதிகளுக்கான அமைப்பு உதவவேண்டும் என அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல் வன் - ஐ.நா.வின் அகதிகளுக்கான அமைப்பின் இலங்கை வதிவிடப் பிரதிநிதி நீல் றைட்டிடம் வேண்டு கோள் விடுத்துள்ளார்.

கிளிநொச்சியிலுள்ள விடுதலைப் புலிகளின் சமா தான செயலகத்தில் நேற்று இலங்கைக்கான ஐ.நா. வின் அகதிகளுக்கான அமைப்பின் வதிவிடப்பிரதிநிதி நீல் றைட்டுடனான

(12 ஆம் பக்கம் பார்க்க)



# அமெரிக்க வெடிபொருள் நிபுணர்கள் யாழ்.குடாநாட்டுக்கு நேற்று விஜயம்!



யாழ்ப்பாண மாவட்டத்தில் வெடிபொருட்கள் அகற்றுவது தொடர்பாக ஆராயும் பொருட்டு, மூவர் அடங்கிய அமெரிக்க நாட்டுக் குழுவொன்று, நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தது.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகத்தின் அரசியல் அலுவலகர் யோடி ரெயிலர், அமெரிக்காவின் வெடிபொருள் அகற்றும் பணியின் இயக்குநர் கேணல் றிச்சட் கிட், உதவி இயக்குநர் சி.ஹரிஸ் ஆகியோரே நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டவர்களாவர்.

யாழ்.மாவட்டத்தில் வெடிபொருள் அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள ஹலோரஸ்ட் வெடிபொருள் அகற்றும் பிரிவினர், டெனிஸ் வெடிபொருள் அகற்றும் பிரிவினர், இராணுவ வெடிபொருள் அகற்றும் பிரிவினர் போன்றோரது பணிகளை நேரில் சென்று பார்வையிட்டதுடன், நேற்றுப் பிற்பகல் யாழ்.செயலகத்தில் உள்ள

(12 ஆம் பக்கம் பார்க்க)

# விடுதலைப் புலிகள் - எஸ்.ரி.எவ் அம்பாறையில் இன்று சந்திப்பு!

(மட்டக்களப்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும், விசேட அதி ரடிப்படையினருக்கும் இடையிலான சந்திப்பொன்று இன்று அம்பாறை யில் இடம்பெறவுள்ளது.

இன்று காலை 10 மணிக்கு அக்கரைப்பற்றிலுள்ள போர்நிறுத் தக் கண்காணிப்புக் குழுவின் அலு வலகத்தில் இந்தச் சந்திப்பு நடை பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள் ளது.

அம்பாறை மாவட்டத்தில் அண் மைக்காலமாக விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் கைது செய் யப்படுவது குறித்தும், பயணங் களின் போது தடுத்து நிறுத்தப்படு வது குறித்தும் இந்தச் சந்திப்பில் முக்கியமாக ஆராயப்படவுள்ளதா கத் தெரிவிக்கப்படுகிறது.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அக்கரைப்பற்றுக்கான பிரதிநிதி ரைமோவின் தலைமை யில் நடைபெறவுள்ள இந்தச் சந் திப்பில் -

விடுதலைப் புலிகளின் சார்பில் அம்பாறை மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் தலைமையிலான குழுவினரும், படைத்தரப்பில் விசேட அதிரடிப் படை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட் சகர் ரத்னாயக்கா தலைமையிலான குழுவும் கலந்துகொள்ளவுள்ள தாகத் தெரியவருகிறது. (07)





இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.

EXPOAIR

Your friend in the skies...

# மோட்டார் சைக்கிள்– லொறி விபத்தில் இருபாலை இளைஞர் ஒருவர் படுகாயம்!

(இருபாலை)

இருபாலைப் பகுதியில் நேற்று லொறி - மோட்டார் சைக்கிள் விபத்தில், இளைஞர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் மாலை இருபாலை கற்பகப் பிள்ளையார் கோவிலுக்கு முன்பாக இடம்பெற்ற இந்த விபத்தின்போது - அதே இடத்தைச் சேர்ந்த எஸ்.சரவணன் (வயது 20) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

யாழ்.நகரை நோக்கிச் சென்றுகொண்டிருந்த லொறியுடன் கோப்பாய் நோக்கி வேகமாக வந்துகொண்டிருந்த மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து லொறியுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது. (90)

# சாரதி பயிற்சிபெறும் மாணவர்களுக்கு மத்திய கல்லூரி அதிபர் அழைப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கல்வி வலயத் திணைக்களத்தின் முறைசாராக் கல்விப் பிரிவினால் யாழ்.மத்திய கல்லூரியில் நடத்திய வாகன சாரதிகளுக்கான பயிற்சி நெறிக்குத் தோற்றிய மாணவர்களை இன்று பிற்பகல் 3 மணிக்கு கல்லூரிக்குச் சமூகமளிக்குமாறு அதிபர் க.இராசதுரை கேட்டுள்ளார்.

வாகன சாரதிப் பயிற்சியை முடித்தவர்கள் மோட்டார் வாகனத் திணைக்களத்துக்கு இறுதிப்பரீட்சைக்கும், வாகனம் செலுத்துதல் பயிற்சிக்கும் விண்ணப்பங்கள் அனுப்பப்படவுள்ளன. இதற்கான படிவத்தில் ஒப்பமிடுவதற்காகவே இன்று சமூகமளிக்கும்படி அதிபர் கேட்டுள்ளார்.

வாகன சாரதிப் பயிலுனர் அனைவருக்கும் எதிர்வரும் சனிக்கிழமை 3 மணிக்கு நிலையத்தில் முன்னோடிப் பரீட்சை நடைபெறவுள்ளது.

நிலையத்துன் முன்னோடிப் பரீட்சைக்கு தோற்றாதவர்களின் சாரதி விண்ணப்பத்தினை உரியமுறையில பூர்த்தி செய்யாதவர்களும் இறுதிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு படிவங்கள் அனுப்பப்படமாட்டாது எனவும் அதிபர் தெரிவித்தார்.

# மிருசுவில் அரசினர் பாடசாலைக்கு புதிய கட்டடம் அமைக்க ஜப்பான் அரசு நிதியுதவி!

மிருசுவில் அரசினர் தமிழ் கலவன் பாடசாலைக்கான புதிய கட்டடத் தொகுதியை அமைத்துக் கொடுப்பதற்கு ஜப்பானிய அரசு முன்வந்துள்ளது.

சுமார் 300 மாணவர்கள் கல்வி கற்கும் இந்தப் பாடசாலைக்கு வகுப்பறைகள், நூலகம், விஞ்ஞான ஆய்வுகூடம் மற்றும் ஆசிரியர் விடுதி என்பவற்றுடன் தகவல் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்துவதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கவும் ஜப்பானிய அரசு முன்வந்துள்ளது. (17)

# வடமராட்சி பிரதேசத்தில் டெங்குகாய்ச்சல் பரவி வருவதை தடுப்பதற்கு விடுதலைப் புலிகளின் அரசியற் பிரிவு ஏற்பாடு

வடமராட்சிப் பகுதிகளில் டெங்கு காய்ச்சல் பரவிவருவதைத் தடுப்பதற்கான நடவடிக்கையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற் துறையினர் ஈடுபட்டுள்ளனர்.

வடமராட்சிப் பிரதேசத்தில் டெங்குக் காய்ச்சல் பரவிவருவதாகக் கூறப்பட்டு வருவதனையடுத்து, இதனைக் கட்டுப்படுத்துவதற்காக பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்த நோய்களைக் கட்டுப்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ள பிரதேச செயலகங்கள், உள்ளூராட்சி மன்றங்கள், சுகாதாரத் திணைக்களங்கள் ஆகியவற்றின் நடவடிக்கைக்கு பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையினர் பூரண ஆதரவு வழங்கவேண்டும் எனத் தெரிவித்ததுடன், அனைத்து கிராமிய உறுப்பினர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு வடமராட்சிக்கோட்டப் பொறுப்பாளர் இ. தயா தெரிவித்தார்.

டெங்கு நோயினால் ஏற்படும் அபாயங்கள் குறித்து பாடசாலைகள் மற்றும் சனசமூக நிலையங்கள், தனியார் கல்வி நிறுவனங்களில் விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு தேசிய எழுச்சிப்பேரவையின் வடமராட்சி கோட்டத்திடம், கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் தயா கோரிக்கை விடுத்துள்ளார்.(13)

## பொது நூலகத்துக்கு தண்ணீர்த் தொட்டி

பருத்தித்துறை பிரதேசசபையினால் நடத்தப்பட்டுவரும் மந்திகையிலுள்ள பொது நூலகத்துக்கு 90 ஆயிரம் ரூபா செலவில் தண்ணீர்த் தொட்டியொன்று அமைக்கப்படவுள்ளது.

பருத்தித்துறை பிரதேசசபையின் நிதியிலிருந்து இந்தத் தண்ணீர்த் தொட்டி அமைக்கப்படவுள்ளது.

## விஞ்ஞானபாட செயலமர்வு

தெல்லிப்பளை கல்விக்கோட்டத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கான விஞ்ஞான பாட செயலமர்வு இன்று இராமநாதன் கல்லூரியில் காலை 8.30 தொடக்கம் மாலை 3 மணிவரை நடைபெறும். இதில், ஆண்டு 6 தொடக்கம் ஆண்டு 11 வரையான விஞ்ஞான ஆசிரியர்களைக் கலந்துகொள்ளுமாறு தெல்லிப்பளை கோட்டக் கல்வி அதிகாரி தெரிவித்தார். (72)

# அளவெட்டிப் பகுதியில் வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி

தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் வலி.வடக்கு பிரதேசசபை அனுசரணையுடன் வளர்ப்பு நாய்களுக்கான தடுப்பூசி மருந்து ஏற்றப்பட்டு வருகின்றது.

அளவெட்டி வடக்கு, கலைவாணி சனசமூக நிலையத்தில் காலை 9 மணி முதல் 11 மணிவரையும், அறிவொளி சனசமூக நிலையத்தில் முற்பகல் 11.15 முதல் 12.30 மணி வரையும், பத்தானை பாரதிதாசன் சனசமூக நிலையத்தில் 1 மணி முதல் 2.30 மணி வரையும் தடுப்பூசி ஏற்றப்படும்.

அளவெட்டி மேற்கில் - காலை 9 மணிமுதல் 11 மணிவரை - முற்போக்கு வாலிப சனசமூக நிலையம், முருகபுரம் சிறிரங்கன் சனசமூக நிலையம், பத்துப்பனையடி தேவன் ஸ்ரோர்ஸ், காட்டுப்புலம் கலைமகள் சனசமூக நிலையம் ஆகியவற்றில் நடைபெறவுள்ளதாக வலி.வடக்கு பிரதேசசபையின் செயலாளர் அறிவித்துள்ளார்.

## சட்டவிரோதமாக மணல் ஏற்றியோர் கைது

மண்கும்பான் பகுதியில் கடந்த சனிக்கிழமை சட்டவிரோதமாக, உழவு இயந்திரத்தில் மண் ஏற்றிக்கொண்டிருந்தோர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை - இந்தப்பகுதியில் மணல் அகழ்வதால் கடல்நீர் தரைக்குள் உட்புகுவதாக இந்தப் பகுதி மக்கள் தெரிவித்ததையடுத்து மண் அகழ்வு தடைசெய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (99)

# மாமனிதர் குமாரின் 66 வது ஜனன நிகழ்வு

மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் அறுபத்தி ஆறாவது ஜனனதின நிகழ்வுகள் நாளை அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் கட்சியின் தலைமை அலுவலகத்தில் காலை 10 மணிக்கு, கட்சித்தலைவர் அ.விநாயகமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தநிகழ்வில் - கட்சிச் செயற்குழு உறுப்பினர்களும் மற்றும் ஆதரவாளர்களும் கலந்துகொண்டு நினைவுரை வழங்கவுள்ளனர். (31)

## ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கு பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் இந்த மாதம் 24 ஆம் திகதி காலை 10 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 17 ஆம் திகதி நடைபெறவிருப்பதாக அறிவிக்கப்பட்ட போதிலும், தவிர்க்க முடியாத காரணத்தினால் அன்றைய தினம் நடைபெறமாட்டாது என உதவிப் பிரதேச செயலர் ஏ.அன்ரன் யோகநாயகம் தெரிவித்தார்.

## பரீட்சை முடிவுகள் வெளியாகின

(யாழ்ப்பாணம்)

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன் நடைபெற்ற எழுதுவினைஞர் பரீட்சைப் பெறுபேறு வெளியாகியுள்ளது. பரீட்சைப் பெறுபேறுகள் பரீட்சார்த்திகளுக்கு தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (87)

## சிரமதானம்

நல்லூர் கந்தன் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு, ஆலயத்தைச் சூழவுள்ள பகுதிகள் - யாழ்.மாநகரசபை ஊழியர்களால் சிரமதானம் மூலம் துப்பரவு செய்யப்பட்டு வருகிறது. (63)

# செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுச் செய்தி

**கீழே குறிப்பிட்டுள்ள பெயருடையவர்கள் அருகில் உள்ள செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றீர்கள்.**

*அலுவலக நேரம் :- திங்கள் தொடக்கம் வெள்ளி வரை 8.00 மணி தொடக்கம் 5.00 மணி (விடுமுறை நாட்கள் தவிர)*

| | |
|---|---|
| 01. தவேந்திரன் மரியா ஜுசிஸ்டா | பிரான்பற்று நிச்சாமம், சங்கானை. |
| 02. கந்தையா திருச்செல்வம் | மே/பா.ந.குமரகுருநாதன், பிள்ளையார் கோவிலடி, மூளாய். |
| 03. திருக்கேதீஸ்வரன் கிருபாராணி | செட்டியார் மடம், அராலி வடக்கு. |
| 04. பேரழகன் சரோஜினிதேவி | கருப்பட்டி பிள்ளையார் கோவிலடி, அராலி தெற்கு. |
| 05. குலசேகரம்பிள்ளை ராசமலர் | பராளை வீதி, சுழிபுரம் |
| 06. ஜெயக்குமார் செல்வலட்சுமி | செல்வகிருஷ்ணன் வீதி, சுழிபுரம் மத்தி |
| 07. சாந்தலிங்கம் மேரி | மே/பா சின்னத்தம்பி, நாவற்குழி சந்தி |
| 08. முருகேசு நாகராசா | பண்டிதர் குடியிருப்பு, கெற்பலி, மிருசுவில் |
| 09. சிவானந்தன் சகுந்தலாதேவி | கல்வயல், சாவகச்சேரி |
| 10. நாகமணிப்பிள்ளை பிரின்ஸ் நவநேசன் | தட்டார் ஒழுங்கை, மட்டுவில் வடக்கு |
| 11. சூசைதாசன் லீலாவதி | மே/ப சாம் இராசையா, உசன் மிருசுவில் |
| 12. பாலராசா இவோனி | மே/ப லிகோரியார் கோவில், சாவகச்சேரி |
| 13, ஞானபண்டிதர் (தங்கராசா) மகேஸ்வரி | கச்சாய், சாவகச்சேரி |
| 14. மாரிமுத்து கதிரவேலு | மேகனதாஸ் பாடசாலை அருகில், மட்டுவில் தெற்கு |
| 15. ரத்தினம் அன்னபூரணம் | ஞானவைரவர் கோவிலடி, நுணாவில் |
| 16. சண்முகம் நித்தியானந்தம் | மறவன்புலவு. |
| 17. ஜெயசிங்கம் மரியநாயகி | கரம்பன் மேற்கு, ஊர்காவற்துறை. |
| 18. சாந்தமேரி ஜேசுதாசன் | புனித மரியாள் இடம்பெயர்ந்தோர் முகாம், சுருவில். |
| 19. தம்பிராசா சரஸ்வதி | 4 ஆம் வட்டாரம் புங்குடுதீவு. |
| 20. தர்மலிங்கம் சரஸ்வதியம்மா | அம்மன் கோவிலடி, மண்டைதீவு. |
| 21. குணரத்தினம் கலைவாணி | வாரிவளவு காரைநகர். |
| 22. செல்வராசா சிவபாக்கியம் | அம்மன் கோவிலடி, மயிலிட்டி வடக்கு. |
| 23. துரைராஜலிங்கம் சந்திரலீலா | மே/ப தங்கராசா புகையிரத வீதி, மல்லாகம். |
| 24. ரட்ணானந்தன் பவளக்கொடி | துர்க்கை அம்மன் கோயில், தெல்லிப்பளை. |
| 25. முருகவேல் நிலுக்சி | 7 ஆம் கட்டை, காங்கேசன்துறை வீதி, மல்லாகம். |
| 26. மகேசன் | நீதிமன்ற வீதி, மல்லாகம். |
| 27. மாணிக்கம் விக்டோரியா | செபஸ்தியார் கோவிலடி, கோண்டாவில் வடக்கு. |
| 28. நடராசா சிவஞானம் | கோண்டாவில் கிழக்கு |
| 29. விக்னேஸ்வரன் ராகினி | 90 அம்மன் கோவில் வீதி, திருநெல்வேலி கிழக்கு. |
| 30. ஸ்ரீகணேசமூர்த்தி ஜெயந்தி | மே/பா. திருமதி.ப.நடராசா, மணியங்காடு, கொக்குவில் மேற்கு. |
| 31. ஆர். காளிராசன் | சாந்தி அரிசி ஆலை, கோண்டாவில் கிழக்கு. |
| 32. சித்திரவேல் பூமணி | இளையதம்பி வீதி, கண்டி வீதி, அரியாலை |
| 33. செல்வரத்தினம் சொபாக்கியலட்சுமி | 50/35 செட்டித்தெரு, நல்லூர் |
| 34. தியாகு அகத்தம்மா | 8 பிள்ளையார் கோவிலடி, அரியாலை |
| 35. பசுபதி மகேஸ்வரி | 33 செல்லர் ஒழுங்கை, செம்மணி வீதி, நல்லூர் |
| 36. அழகேஸ்வரன் மொறின் கிறிஸ்டினா | நேதாஜி ஒழுங்கை, நல்லூர் |
| 37. குலசேகரம் பாலகிருஷ்ணன் | 33 கைலாய பிள்ளையார் கோவில் வீதி, நல்லூர் |
| 38. குணபாலசிங்கம் கமலராணி | வன்னியசிங்கம் வீதி, இருபாலை வீதி, கோண்டாவில் கிழக்கு |
| 39. ஜோசப் ஃபிரீடா | 41/3 செம்மணி வீதி, நல்லூர் |
| 40. ராஜ்குமார் ராஜேஸ்வரி | 387/1 நாவலர் வீதி, நல்லூர். |
| 41. ஐயாத்துரை சுபாசினி | நெட்டிலிப்பாய் பிள்ளையார் கோவிலடி, கோண்டாவில் கிழக்கு. |
| 42. அம்பலம் ஆனந்தராசா | பொன்னையா வீதி, ஆனைக்கோட்டை. |
| 43. சுரேஸ்குமார் சிவமாலினி | விளையாட்டுத்திடல் வீதி, கல்வியங்காடு. |

(c/2924)

*(6)தொடரும்)*

நிறைஞ்சனாஸ் சங்கானை
சரத்குமார், விஜயாவே, செந்தில் நடித்த
நேதாஜி
காட்சி நேரம்:11.00. 2.45. 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
past Perfect

நாகம்ஸ் சுன்னாகம்
சரத்குமார், சாக்ஷி, வடிவேல் நடித்த




தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)

ராஜா யாழ்ப்பாணம்.
சிம்பு, ரம்யாகிருஷ்ணன், மற்றும் மும்தாஜ் நடித்த




சில தினங்கள் மட்டும்
காட்சிநேரம்:-10.30, 2.30, 6.30 (பு.நே)

# கூட்டுறவாளரின் கண்ணீர் அஞ்சலி

**கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ.சங்கத்தின் முன்னாள் பணியாளரும் , முன்னாள் சங்கத் தலைவரும், தற்போதைய இயக்குநர்சபை உறுப்பினரும், யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் முன்னாள் இயக்குநர்சபை உறுப்பினரும், கல்விச்சேவையில் அதிபருமாகிய தாமரைக்குளத்தடி துன்னாலையைச் சேர்ந்த**

## திரு.முருகேசு ஸ்ரீஸ்கந்தராசா

**அவர்கள் 09.08.2004ல் இறைபதமடைந்த செய்திகேட்டு மனம் வருந்துகின்றோம். அன்னாரின் பிரிவையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.**

*கட்டைவேலி - நெல்லியடி, ப.நோ.கூ.சங்கம்.*

*பணிப்பாளர்கள், பணியாளர்கள்.*

(c/2926)

# ஐ.தே.முன்னணிக்குள் தொண்டமானை இனிமேலும் வைத்திருக்க வேண்டாம்!

## ரணிலிடம் கட்சிப் பிரமுகர்கள் வலியுறுத்தல்

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஆறுமுகம் தொண்டமானை ஐக்கிய தேசியக் கட்சிக்குள் தொடர்ந்தும் வைத்திருப்பதற்கு அநாவசியமாக முயற்சி எடுக்க வேண்டாம் என்று, ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த அங்கத்தவர்களில் பலர், கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்கவிடம் அறிவிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தங்கள் தனிப்பட்ட தேவைகளை முன்வைத்து, நடவடிக்கைகள் எடுக்கின்ற எந்தவொரு கட்சியையோ, அரசியல்வாதியையோ ஐக்கிய தேசியக் கட்சிக்குள் மேலும் தங்க வைக்கக்கூடாது என்றும், மூத்த அங்கத்தவர்களின் நிலைப்பாடாக உள்ளது எனத் தெரியவருகிறது.

கட்சியைத் திருத்தி அமைத்து நடவடிக்கையை மேற்கொண்ட பின்னர் பலமுள்ள கட்சியாக எதிர்வரும் பொதுத்தேர்தலில் முகங்கொடுக்க வேண்டும்.

அதன்படி அடுத்த 14 ஆம் திகதியோ, அதற்குப் பின்போ ஆறுமுகம் தொண்டமான் அரசோடு இணைவராயின் அதற்கு இடம் கொடுக்குமாறும் அவர்கள் கருத்துக் கூறியுள்ளனர். (தே)

# ஜே.வி.பியுடன் பேச்சுநடத்த ஹெல உறுமய தயாராம்!

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரதான கட்சியான ஜே.வி.பியினர் - இடைக்கால நிர்வாகசபை குறித்துக் கொண்டுள்ள கருத்தும், ஜாதிக ஹெல உறுமயவின் நிலைப்பாடும் ஒத்தவையாக இருப்பதால், ஜே.வி.பியினர் அழைப்பு விடுத்தால், இரண்டு கட்சிகளினதும் நிலைப்பாட்டை பலமுள்ளதாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படுமென ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் வண.எல்லாவல மெத்தானந்த தேரர் தெரிவித்தார்.

இடைக்கால நிர்வாகசபையை நிறுவுவது - ஈழ ராஜ்ஜியத்தை நிறுவுவது என்பதே என்றும், அதற்கு எதிராக எந்தவொரு கட்சியுடனும் பேச்சுவார்த்தை நடத்துவது இனத்துக்குத் தேவையானது என நினைத்து நடவடிக்கை எடுக்கவுள்ளோம்.

குறுகிய கட்சி பேதங்களை மறந்துவிட்டு, ஒன்றுபட்ட நாட்டின் அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து நடவடிக்கை எடுக்க வேண்டிய தேவை தற்போது எழுந்துள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (தே)

# இனப்பிரச்சினையைத் தீர்க்காவிடின் நாட்டை முன்னேற்ற முடியாது

## அமைச்சர் டி.யு குணசேகர

இரண்டு பரம்பரையாக நீடித்துக் கொண்டிருக்கும் இனப்பிரச்சினைக்குத் தீர்க்கமான தீர்வு ஒன்று காணாவிட்டால், நாட்டை ஒரு அங்குலமாவது முன்னேற்ற முடியாது என அமைச்சர் டி.யு.குணசேகர தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் காலை மல்வத்த மகாநாயக்க தேரர் திப்பிட்டுவாவே சித்தார்த்த சிறிசுமங்கள தேரரை அவரது வாசஸ்தலத்தில் சந்தித்தபோதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தப் பிரச்சினையை நாம் எமது மூன்றாவது தலைமுறையினருக்கும் ஒப்படைத்துவிடும் ஒரு நிலையை உருவாக்காமல், நல்லதொரு தீர்வைக் காண மல்வத்த மகாநாயக்க தேரர் உட்பட அனைத்துச செல்வாக்குப் படைத்த பௌதத மதகுருமாரும் உடனடியாக நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# தகுதி பெற்ற மாணவர்களுக்கு ஆறுமாத காலத்துக்குள் பல்கலைக்கழக அனுமதி

கடந்த மே மாதம் நடைபெற்ற கல்விப் பொதுத்தராதரப்பத்திர உயர்தரப் பரீட்சையில் - தோற்றியவர்களில் ஒரு லட்சத்து எண்ணாயிரத்துக்குக் கூடுதலான மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதி பெறத் தகுதி பெற்றிருப்பதாகப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் மஹிந்தவிஜேசிறி தெரிவித்தார்.

பரீட்சையில் தோற்றிய பரீட்சார்த்திகளின் மொத்த எண்ணிக்கையில் இது 54 சதவீதமாகும். கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது, இந்த ஆண்டு கல்விப் பொதுத்தராதர உயர்தரப்பரீட்சையில் தோற்றியவர்கள் 10 ஆயிரத்தால் குறைந்துள்ளது.

மூன்று பாடங்களிலும் சிறப்புச் சித்தி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை 2750 ஆகும். கடந்த ஆண்டில் இந்தத் தொகை 2569 ஆக இருந்தது.

சகல பாடங்களிலும் சித்தியெய்தி, ஆனால் பொதுப் பரீட்சையில் 30 புள்ளிகளுக்குக் குறைவான புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள் இந்த ஆண்டு பல்கலைக்கழகத்துக்கு தெரிவுசெய்யும் தகுதியைக் கொண்டிருக்கமாட்டார்கள்.

ஆயினும், அடுத்த ஆண்டில் பொதுப் பரீட்சையில் தேவையான புள்ளியை அந்த மாணவர்கள் பெறும் பட்சத்தில் அவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெறுவார்கள் என்றும் அவர் கூறினார்.

பரீட்சைத் திணைக்களத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே பரீட்சை ஆணையாளர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

இந்தச் செய்தியாளர் மாநாட்டில் கருத்து வெளியிட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் ரஞ்சித் மென்டிஸ் -

வெளியான பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் மாணவர்கள் ஆறுமாத காலத்துக்குள் பல்கலைக் கழங்களில் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பங்கள் அடுத்த மாதம் 3 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

மாதிரி விண்ணப்பங்கள் நாளை முதல் விநியோகிக்கப்படும். இவற்றை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் பெற்றுக்கொள்ளலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வெள்ளத்தால் கரையொதுங்கியவர்களே ஜே.வி.பியில் இப்போது இருக்கின்றனர்

## மகிந்த விஜயசேகர தெரிவிப்பு

ஜே.வி.பியில் தற்போது இருப்பவர்கள் அனைவரும் வெள்ளத்தால் இழுத்து வரப்பட்டு, கரையொதுங்கியவர்கள்.

ஜே.வி.பியை நானே உருவாக்கினேன். அரசாங்கச் சொத்துக்களைப் பாதுகாக்கப் பாடுபடும் ஜே.வி.பியினரே 1988 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அரசாங்கச் சொத்துக்களை அழித்தனர் எனக் கொழும்பில் நேற்றுமுன்தினம் நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் மகிந்த விஜயசேகர தெரிவித்தார்.

இந்தப் பத்திரிகையாளர் மாநாட்டில் எஸ்.பி.திஸநாயக்க தெரிவித்ததாவது-

வெளிநாட்டு உதவிகளை இலங்கை பெற்றால், இலங்கை அந்த நாடுகளுக்கு அடிமையாகிவிடு மென ஜே.வி.பி கூறுவது அந்தக் கட்சியின் தலைவரையே சுட்டிக் காட்டுவதாகவுள்ளது.

சோமவன்ச அமரசிங்க வெளிநாட்டில் பிரஜாவுரிமை பெற்றுள்ளார். எனவே, ஜே.வி.பியின் கூற்றுப்படி அவரும் கொத்தடிமையா என்பதை ஜே.வி.பி விளக்கவேண்டுமெனவும், திஸநாயக்க கேட்டுக்கொண்டுள்ளார்.

# இ.தொ.கவுக்கு அமைச்சுப் பதவியை விட்டுக்கொடுப்பதற்குத் தயாராம்!

## சி.பி.ரத்னாயக்க கூறுகிறார்

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அரசாங்கத்துடன் இணையுமானால், நாட்டு நலன்கருதி அமைச்சர் பதவியை விட்டுக்கொடுக்கத் தயாராக இருப்பதாகத் தோட்ட உட்கட்டுமான அமைச்சர் சி.பி ரத்னாயக்க தெரிவித்தார்.

கண்டியில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

1978 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட இன்றைய அரசியல் சட்டத்தினால், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஏனைய கட்சிகளைவிட 7 லட்சம் வாக்குகளை அதிகமாகப் பெற்றும் கூட, நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலமின்றிய நிலையேற்பட்டுள்ளது. நாட்டில் பல்வேறு பிரச்சினைகளுக்கு உரிய தீர்வைக் காணவும், மக்களின் தேவைகளை நிறைவேற்றவும் நாட்டில் சமாதானத்தை நிலைநாட்டவும் புதிய அரசியல் சட்டம் இன்று அவசியமாகவுள்ளது என்றும் அமைச்சர் மேலும் கூறினார். (தே)

# ஜனாதிபதி சந்திரிகாவின் காலத்திலேயே இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டும்

## பிரதியமைச்சர் டிலான் சமரவீர

ஜனாதிபதி சந்திரிகாவின் காலத்திலேயே இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படவேண்டும். எனவே, இந்த விடயத்தைப் பிற்போட முடியாதென துறைமுக மற்றும் விமான சேவைகள் பிரதி அமைச்சர் டிலான் சமரவீர தெரிவித்தார்.

இலங்கைத் துறைமுக அதிகார சபையின் 25 வருட வெள்ளிவிழா நிகழ்வுகள் - திருகோணமலைத் துறைமுகத்தில் நேற்றுமுன்தினம் காலை 10.30 மணியளவில் இடம்பெற்றது. இநத நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே, பிரதியமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் - துறைமுகங்களில் 25 வருடங்கள் சேவையாற்றிய 40 ஊழியர்களுக்கு தலா பத்தாயிரம் ரூபா வழங்கப்பட்டது. அத்துடன், க.பொ.த சாதாரணதரம் சித்தியடைந்த ஊழியரின் பிள்ளைகள் மூவருக்குப் புலமைப் பரிசில்களும் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் மற்றொரு பிரதி அமைச்சரான தயாரித்த திசேரா மற்றும் திருமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான நஜீப் ஏ.மஜீத் மற்றும் ஜயந்த விஜய சேகரவும் கலந்துகொண்டனர்.

பிரதியமைச்சர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் -

இலங்கைத் துறைமுக அதிகார சபை காலி, அம்பாந்தோட்டை துறைமுகங்களை அபிவிருத்தி செய்துள்ளது. தொடர்ந்து திருமலைத் துறைமுகத்தையும் அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது.

அடுத்த கட்டமாக ஒலுவில், காங்கேசன்துறை, பருத்தித்துறை துறைமுகங்களும் அபிவிருத்தி செய்வதற்குநடவடிக்கை எடுக்கப்படும்.

காப்புறுதிக் கட்டணங்களின் அதிகரிப்புக் காரணமாகப் பெருபாலான கப்பல்கள் திருகோணமலைக்கு வருவதில்லை. அவர்கள் கொழும்புத் துறைமுகத்தையே நாடுகின்றனர். முன்னர் துறைமுகங்கள் திறைசேரியின உதவியுடன் அபிவிருத்தி செயயபபட்டன. ஆனால், தற்போது திறைசேரிக்குப் பெருமளவில் நிதிகளை வழங்கும் நிறுவனமாக, இலங்கைத் துறைமுக அதிகாரசபை விளங்குகின்றது.

துறைமுகத்தை அடிப்படையாகக் கொண்டு, பிரதேசத்தை அபிவிருத்தி செய்ய முடியும். விரைவில் திருகோணமலையும் அபிவிருத்தி காணுமென்றார்.

பரதி அமைச்சர் தயாரித்த திசேரா உரையாற்றுகையில் -

இலங்கையின் பொருளாதாரத்தில் பெருமளவு வருமானத்தை ஈட்டித்தரும் நிறுவனமாக இலங்கைத் துறைமுக அதிகார சபை விளங்குகின்றது. நாட்டிலுள்ள அனைத்து துறைமுகங்களும் விரைவில் அபிவிருத்தி காணப்படவுள்ளது என்றார். (04)

# விசேட அதிரடிப்படையினரால் மூன்று தமிழ் இளைஞர்கள் கைது

அம்பாறை - அக்கரைப்பற்று அதிரடிப்படையினரால் மூன்று இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

அதிரடிப்படையின் சோதனைச் சாவடி ஒன்றில் வாகனம் ஒன்றோடு இவர்கள் கைது செய்யப்பட்டனர். இவர்கள் மூவரும் மேலதிக விசாரணைக்காக அக்கரைப்பற்று பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

மூவரும் நேற்று முன்தினம் அக்கரைப்பற்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

வாகனச் சாரதியை ஆட்பிணையில் செல்ல அனுமதித்த நீதிவான் ஏனைய இருவரையும் அடுத்த இருபதாம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

# முன்னாள் ஆட்பதிவு ஆணையாளரின் பிணைமனு நிராகரிப்பு

(கொழும்பு)

முன்னாள் ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் விஜயரணசிங்க சமர்ப்பித்த பிணைமனுவை நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

இவர் பிணையில் விடுவிக்கப்பட்டால், இனிமேல் மேற்கொள்ளும் விசாரணைக்குத் தடையாக இருக்குமென்று கொழும்பு நீதவான் சறோஜினி குசல அபயவர்த்தன தெரிவித்தார்.

உடல் நிலையைக் கருத்திற்கொண்டு மனுதாரர் பிணையில் விடுவிக்கப்படவேண்டுமென்று, விடுத்த வேண்டுகோளுக்கு சி.ஐ.டியினர் பலத்த எதிர்ப்புத் தெரிவித்தனர்.

அதனையடுத்து அவரது பிணைமனுவை நீதிவான் நிராகரித்தார்.

# தூத்துக்குடி இன்றேல் கொச்சி; கப்பல் சேவைக்கு மாற்றுத்திட்டம்!

தூத்துக்குடிக்கும், கொழும்புக்கும் இடையிலான கப்பல் போக்குவரத்துக்கு தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா எதிர்ப்புத் தெரிவிப்பதால், கொழும்புக்கும், கேரளாவிலுள்ள கொச்சிக்குமிடையே கப்பல் போக்குவரத்து நடத்துவது பற்றி ஆலோசிக்கப்பட்டு வருவதாக இந்திய மத்திய கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் ரி.ஆர் பாலு தெரிவித்தார்.

தூத்துக்குடிக்கும், கொழும்புக்குமிடையில் கப்பல்போக்குவரத்து ஆரம்பிக்கப்பட்டால், இந்தியாவுக்கு அச்சுறுத்தலாக அமைவதோடு, விடுதலைப் புலிகள் தமிழ் நாட்டுக்குள் ஊடுருவ வாய்ப்பு ஏற்படும் என்று தமிழக முதலமைச்சர் மத்திய அரசுக்கு எதிர்ப்புத் தெரிவித்ததாலேயே இந்த மாற்றுத் திட்டம் நடைமுறைப்படுத்துவதற்கு ஆலோசிக்கப்பட்டுவருகிறது.

கப்பல் போக்குவரத்து இடம் பெற்றால், இரு நாடுகளுக்கும் இடையில் வர்த்தக உறவுகள் மேம்படும் என்று பாலு மேலும் தெரிவித்தார். இந்தத் திட்டத்துக்குக் கேரளா முதலமைச்சர் ஏ.கே அந்தோனி ஆதரவு தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

# ஹெல உறுமய குழுக்களிடையே மோதலால் மஹரகமவில் பதற்றம்

ஜாதிக ஹெல உறுமய கட்சியின் இரு குழுவினருக்கு இடையே ஏற்பட்ட முறுகல் நிலையால், நேற்றுமுன்தினம் மாலை மகரகம இளைஞர் சேவை மன்றத்தில் பதற்ற நிலை ஏற்பட்டது.

ஜாதிக ஹெல உறுமய கட்சியின் மாற்றுக் குழுவினரின் விசேட கூட்டம் ஒன்று, நேற்றுமுன்தினம் மாலை மகரகம இளைஞர் சேவை மன்றத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, மற்றுமொரு குழு உள்ளே நுழைந்ததிலேயே இந்தப் பதற்றம் ஏற்பட்டது.

இதேவேளை, ஜாதிக ஹெல உறுமய கட்சியின் உறுப்பினர்கள் சிலர், இளைஞர் சேவை மன்றத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர். இதன் பின்னர் ஜாதிக ஹெல உறுமயவின் மாற்றுக் குழுவின் கூட்டத்துக்குச் சென்று, அவர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவமானது உண்மையான பௌத்தர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டது என்று, ஜாதிக ஹெல உறுமயவின் தேசிய அமைப்பாளரான ஹெக்டர் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

குழப்பத்துக்குக் காரணமாக இருந்த பல தேரர்கள் ஜாதிக ஹெல உறுமய அமைப்பில் உள்ளவர்கள் என்றும் அவர் கூறினார்.

### பிரமாண்டமான முறையில் இடம்பெறவுள்ள

# ஒலிம்பிக் துவக்க விழா ரகசியம் ஒத்திகையில் அம்பலமானது



ஏதென்சுக்குள் நுழையும் ஒலிம்பிக் ஜோதி

மிகவும் ரகசியமாக வைக்கப்பட்டிருந்த ஏதென்ஸ் துவக்க விழா நிகழ்ச்சிகள் இப்போது அம்பலமாகியுள்ளன.

அரங்கில் திடீரென வெள்ளம் ஏற்படும். இது பிரமாண்ட ஏரியாக உருவாகும். இதன் நடுவில் இருந்து அழகிய தேவதை மேலெழும்பி வருவாள். பின்னர் ஏரி மறைந்து மலையாக மாறுவது என, ஒவ்வொரு காட்சிகளும் ரசிகர்களை மெய்சிலிர்க்க வைக்கும் வகையில் துவக்கவிழா அமையவுள்ளது.

கிரீஸ் தலைநகர் ஏதென்ஸில் நாளை மறுதினம் ஒலிம்பிக் போட்டி ஆரம்பமாகவுள்ளது. இதற்கான துவக்க விழா நிகழ்ச்சிகள் பிரமாண்ட அளவில் உருவாக்கப்பட்டுள்ளன. கடந்த ஒரு மாதங்களுக்கு மேலாக கலைஞர்களின் தீவிர முயற்சியில் உருவான இந்த நிகழ்ச்சிகள் ரகசியமாக வைக்கப்பட்டிருந்தது.


ஆனால், நேற்றுமுன்தினம் முக்கிய அரங்கில் நடந்த ஒத்திகை நிகழ்ச்சிக்கு பார்வையாளர்களுக்கும் அனுமதி அளிக்கப்பட்டது. இதை சுமார் 35 ஆயிரம் பேர் கண்டு களிக்க ரகசியங்கள் அனைத்தும் அம்பலமாகியது.

சுமார் 3 மணி நேரம் நடந்த நிகழ்ச்சியின் போது, அரங்கின் மத்தியில திடீரென வெள்ளம் ஏற்பட்டது. இது ஏரியாக மாறியது, அதன் நடுவில் இருந்து ஏதென்ஸ் காவல் தேவதையான ஏதினாவின் சிலை மேலே எழும்பி வந்தது.

பின்னர் காட்சிகள் மாறின மலை உருவானது. அதில் ஒலிவ் மரங்கள் இருந்தன நூற்றுக்கணக்கான இசைக்கலைஞர்களின் வாத்தியங்கள் முழங்க பாரம்பரிய கிரேக்க உடையணிந்த மங்கையர் ஆடிப்பாடி மகிழ்ந்தனர். மனிதன்பாதி குதிரை பாதி உருவிலானவர் அம்பு ஒன்றை எய்தார். இது எரி நட்சத்திரம் போல் பாய்ந்து சென்றது.

பின்னர் புராண காலத்து மனிதர்களான ஜேசன், அர்கானட்சக் தோன்றினர். இதற்குப் பின் ஹோமிரின் பிரபல 'இலியட்' இதிகாசத்தில் இருந்து, குதிரைக்குள் மறைந்திருந்து வீரர்கள் டிராய் நகரை கைப்பற்றிய சம்பவம் விபரிக்கப்பட்டது. 100 மீற்றர் உயரத்தில் ஜோதி ஏற்றப்பட்டது.

இப்படித் துவக்க விழா பழங்கால கிரேக்க சமூகத்தை வெளிப்படுத்துகின்றதென்றால்,




ஏதென்சில் செய்தியாளருக்கான ரயில் போன்ற விசேட ஊர்தி

நிறைவுவிழா தற்போதைய கிரேக்க மக்களின் வாழ்க்கையைப் பிரதிபலிப்பதாக அமையவுள்ளது. ரகசிய மொழியானது பற்றி போட்டி அமைப்பாளர் மைக்கேல் கூறுகையில் -

ஒலிம்பிக் நெருங்கிவிட்டது. இனிமேலும் துவக்க விழா நிகழ்ச்சிகள் குறித்த ரகசியத்தைத் காக்கமுடியாது. ஒத்திகையின்போது பார்வையாளர்களுக்கு ஒரு மணிநேரம் மட்டுமே அனுமதியளிக்கப்பட்டது. எனவே, துவக்க விழாவின் திரில் அனுபவத்தை முழுமையாகப் பெற இயலவில்லை.

டிக்கெட் வாங்கிய லட்சக்கணக்கான ரசிகர்கள் மற்றும் தடகள வீரர்கள் மத்தியில் நிகழ்ச்சிகளைப் பார்ப்பதே நிஜ அனுபவமாக அமையும் என்றார்.

## தியரி மீது போத்தல் வீசிய ரசிகர்களுக்கு 3 ஆண்டு தடை



பிரான்ஸ் உதைபந்தாட்ட வீரர் தியரி ஹென்றிமீது போத்தல் வீசிய ரசிகர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டனர்.

பிரான்ஸ் உதைபந்தாட்ட அணியின் நட்சத்திர வீரர்களுள் தியரி ஹென்றியும் ஒருவர். இவர் அர்சனேல் கிளப் அணிக்காகவும் விளையாடிவருகிறார். இந்த அணி நேற்றுமுன்தினம் மான்செஸ்டர் யுனைட்டட் அணியுடன் 'கம்யூனிட்டி ஷீல்டு உதைபந்தாட்டக் கோப்பைக்கான' போட்டி ஒன்றில் மோதியது.

இதில் பம்பரமாகச் சுழன்று விளையாடிக் கொண்டிருந்தார் தியரி ஹென்றி. முன்கள வீரரான இவரின் ஆட்டத்தைப் பொறுக்காத மான்செஸ்டர் யுனைட்டட் அணி ரசிகர்கள், ஹென்றி மீது போத்தலையும், சிகரெட் லைட்டரையும் வீசினர். இதனால் போட்டி சில நிமிடங்கள் பாதிக்கப்பட்டது.

தொலைக்காட்சிக் கமரா மூலம் இந்தச் செயலில் ஈடுபட்ட ரசிகர்கள் கண்காணிக்கப்பட்டனர். இந்த வன்முறைச் செயலில் ஈடுபட்ட 2 பேரைப் பொலிஸார் கைது செய்தனர். இவர்களுக்கு 3 ஆண்டு உதைபந்தாட்டப் போட்டிகளைக் காணத் தடைசெய்யப்பட்டுள்ளது. இந்தப் போட்டியில் 3:1 என்ற கோல் கணக்கில் அர்சனேல் வென்று கோப்பையைக் கைப்பற்றியது.

இன்னும் இரு நாட்களில்

நமது ஈழநாடு ஒலிம்பிக் 4

ATHENS 2004

விளையாட்டு

## ஐ.சி.சி போட்டிக்காக இலங்கை அணியில் தில்ஹார



இங்கிலாந்தில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஐ.சி.சி. சம்பியன் கிண்ண போட்டிக்கான இலங்கை அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அணியின் பிரதம தேர்வாளர் அசந்த டி மெல் தமது அணிவீரர்களின் பட்டியலை வெளியிட்டார்.

இந்த அணியில் - அண்மையில் நடந்து முடிந்த ஆசியக் கிண்ணப் போட்டியில் இடம்பெற்ற திலின கண்டம்பே மட்டும் மாற்றப்பட்டுள்ளார்.

இவருக்குப் பதிலாக தில்ஹார பெர்ணான்டோ அணியில் சேர்க்கப்பட்டிருக்கிறார். நான்கு வருடங்களாக போட்டிகளில் பங்கேற்றுவரும் தில்கார, இடுப்பு வலியால் தற்போது போட்டிகளில் பங்கேற்காமல் இருந்துவருகிறார்.

இலங்கை அணியில் ஆறு சிறந்த துடுப்பாட்டவீரர்களும் ஓட்டங்களைக் குவிக்கவும், ஏழாவது சகலதுறை ஆட்டக்காரர்களான மஃரூப் மற்றும் உபுல் சந்தனவைச் சேர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இலங்கை அணியில் இடம்பெற்றுள்ள வீரர்கள் வருமாறு - மாவன் அத்தப்பத்து, சனத் ஜெயசூர்ய, குமார் சங்ககார, மஹேல ஜெயவர்த்தன, திலகரட்ண தில்ஷான், சமிந்த வாஸ், பர்வேஸ் மஃரூப், லசித் மாலிங்க, முத்தையா முரளிதரன், நுவன் சொய்சா, தில்ஹார பெர்ணாண்டோ, சமன் ஜெயந்த, அவிஷ்க குணவர்த்தன, உபுல் சந்தன.

# சின்சினாட்டி ரெனிஸ் சம்பியனாக ஆன்ட்ரே அகாஷி தெரிவானார்!

அமெரிக்காவில் நடைபெற்ற சின்சினாட்டி மாஸ்டர்ஸ் ரெனிஸ் இறுதிப் போட்டியில் அமெரிக்க வீரர் ஆன்ட்ரே அகாஷி சம்பியன் பட்டத்தை வென்றார்.

இதன்மூலம் கடந்த 16 மாதங்களாக இருந்த தோல்வியை அகாஷி முடிவுக்குக் கொண்டுவந்தமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவிலுள்ள சின்சினாட்டி நகரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆண்களுக்கான ஒற்றையர் இறுதிப் போட்டி நடைபெற்றது. இதில் பட்டத்தைக் கைப்பற்ற அமெரிக்க வீரர் அகாஷியும், அவுஸ்ரேலிய வீரர் லெய்டன் ஹீவிட்டும் மோதினர்.

பரபரப்பாக நடைபெற்ற இந்த இறுதிப் போட்டியில் அகாஷி 3:6, 3:6, 6:2 என்ற செட் கணக்கில் ஹீவிட்டைத் தோற்கடித்தார். 34 வயதான அகாஷி முன்னதாக அவுஸ்ரேலியா ஓபன் சன்ஜோஸ் மற்றும் இன்டியன் வெல்ஸ் ஆகிய போட்டிகளில் அரையிறுதியை எட்டினார்.

ஆனால், இடுப்புவலிப் பிரச்சினையால் பட்டத்தைக் கைப்பற்ற முடியாமற்போனது. தற்போது ஹீவிட்டுக்கு எதிரான போட்டியில் இடுப்புவலிப் பிரச்சினை அகாஷியைத் தொந்தரவு செய்யாததால் அவர் தனது திறமையை நிரூபித்து வெற்றிபெற்றார்.

2003 ஆம் ஆண்டு ஹவுஸ்ரன் நகரில் - களிமண் தரையில் நடைபெற்ற போட்டியே அகாஷி கடைசியாக வெற்றிபெற்ற போட்டி என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னதாக அகாஷி - காலிறுதியில் நான்காம் நிலை வீரரான கார்லஸ் மோயாவை வெளியேற்றினார். நடப்புச் சம்பியனும், இரண்டாம் நிலை வீரருமான ஆண்ட்ரோவிக்கை பரபரப்பான அரையிறுதியில் வீழ்த்தினார்.

பத்தாம் நிலை வீரரான ஹீவிட்டை இறுதிப் போட்டியில் தோற்கடித்தார். இந்த இறுதிப் போட்டியில் சிறந்த வீரரான அகாஷியின் ஆட்டத்திறன் ரெனிஸ் ரசிகர்களுக்கு ஒரு விருந்தாக அமைந்தது. ஆட்டத்தின் முதல் ஷெட்டில் ஹீவிட் சிறிது தடுமாறினார். இருந்தபோதிலும் தப்பிப் பிழைத்தார்.

ஆறாவது ஆட்டத்தில் சேவிஸ் மூலம் பிரேக் பொயிண்டைப் பெற்றார். ஆனால், 8 ஆவது ஆட்டத்தில் 2 ஆவது சேவிஸை இழந்தார். அகாஷி இரண்டு ஏஸ்கள் மூலம் 15 - 30 என்ற நிலையிலிருந்து, 40 - 30 என்ற நிலைக்கு முன்னேறினார். ஹீவிட் அடுத்து 3 புள்ளிகளை இழந்தார். இதனால் அகாஷி 5-3 என்ற நிலைக்கு உயர்ந்தார்.


பின்பு 6-3 என்ற கணக்கில் முதல் செட்டை வசமாக்கினார்.

இரண்டாவது செட்டில், ஹீவிட் மிகக் கவனமாகவும், எச்சரிக்கையாகவும் ஆடினார். முதல் செட்டில் புரிந்த தவறுகளை மீண்டும் செய்யாமல் பார்த்துக்கொண்டார். இதனால், 4-3 என்ற கணக்கில் முன்னேறினார்.

8 ஆவது ஆட்டத்தில் அகாஷியின் சேவிஸ் பலமாக இருந்தது. பின்பு அகாஷியின் சேவிஸை முறியடித்து 6-3 என்ற கணக்கில் 2 ஆவது செட்டைக் கைப்பற்றினார்.

3 ஆவது செட்டில் மீண்டும் அகாஷியின் கை ஓங்கியது. 4 ஆவது மற்றும் 8 ஆவது ஆட்டத்தில் ஹீவிட்டின் சேவிஸை முறியடித்தார். இறுதியில் 6-2 என்ற கணக்கில் வென்றார் கடைசி ஆட்டத்தில் ஹீவிட் செய்த இரட்டைத் தவறும், அகாஷிக்குச் சாதகமாக மாறியது.

இந்தப் போட்டியில் ஹீவிட்டின் ஆட்டம் சிறப்பாக இருந்தது. முக்கியமாக அவரது சேவிஸ்கள் மற்றும் பந்தைத் திருப்பி அடிக்கும் லாவகம் ஆகியவை பாராட்டும்படி இருந்தன. நான் முழுக் கவனத்துடனும், திறமையுடனும் ஆடியதால் வெற்றிபெற முடிந்தது என்று அகாஷி தெரிவித்தார்.



இந்தப் போட்டியில் நான் நன்கு போராடினேன். அனுபவம் வாய்ந்த அகாஷி மிகுந்த தொழில்நுணுக்கங்களுடன் ஆடினார். சிறந்த வீரர்களில் ஒருவரான அகாஷியிடம் தோல்வியடைந்தது குறித்து நான் கவலைப்படவில்லை என்று ஹீவிட் கூறினார்.

# கென்ய அணியில் மீண்டும் ஒடும்பே



நைரோபி சாம்பியன் கிண்ணக் கிரிக்கெட் தொடருக்கான கென்ய அணியில் சூதாட்டச் சர்ச்சையில் சிக்கிய மவுரிஸ் ஒடும்பே மீண்டும் சேர்க்கப்பட்டுள்ளார்.

இங்கிலாந்தில் அடுத்தமாதம் ஐ.சி.சி. சாம்பியன் கிண்ண (மினி உலகக் கோப்பை) கிரிக்கெட் தொடர் நடைபெறவுள்ளது. இந்தத் தொடருக்கான 14 பேர் கொண்ட கென்ய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களில் முன்னாள் கப்டன் மாரிஸ் ஒடும்பே அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தியாவைச் சேர்ந்த சூதாட்ட புக்கிகளுடன் இவருக்குத் தொடர்பிருந்ததாக, சர்வதேச கிரிக்கெட் சபையில் விசாரணை நடைபெற்றுவருகிறது. விசாரணை முடிவு, அனேகமாக 16 ஆம் திகதி அறிவிக்கப்படலாம்.

குற்றம் உறுதி செய்யப்பட்டால், ஆயுள் தடைகூடக் கிடைக்கலாம். ஆனாலும், தைரியமாக இவரை அணியில் சேர்த்திருக்கிறது கென்ய கிரிக்கெட் தேர்வுக் குழு. இந்த அணி இன்று ஆரம்பமாகும் முத்தரப்பு ஒருநாள் தொடரிலும் (இந்தியா, பாகிஸ்தான் 'ஏ' அணிகளுடன்) விளையாடுகிறது.

அணி விபரம் : ஸ்டீவ் டிகாலோ (கப்டன்) கென்னடி ஒபுயா (துணைக் கப்டன்), ரவிந்து ஷா, ஹிடேஷ் மோடி, மவுரிஸ் ஒடும்பே, ரகேப் அகா, மல்கர் படேல், பீட்டர் ஓகோன்டா, ஜோஸ்பட் அபாபு, மார்ட்டின் சுஜி, தாமஸ் ஒடாயோ, மோரிஸ் ஒமா, லெமெக் ஆன்யான்கோ மற்றும் டோனி சுஜி.

⌘ இலக்கம் 26 முதல் 29 வரை பின்வரும் தாவர வகைகளை அட்டவணைப்படுத்துக.

(மிளகாய், பூசணி, மா, வெண்டி, குப்பைமேனி, பாகல், கத்தரி, வாழை, போஞ்சி, முடக்கொத்தான், துளசி)

| 26. மரங்கள் | 27.செடிகள் | 28. கொடிகள் | 29. பூண்டு |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

⌘ இலக்கம் 30 முதல் 34 வரை ஆங்கிலச் சொற்கள் ஒவ்வொன்றுக்கும்சமமான தமிழ்ச் சொற்களை எழுதுக.

30. Bank of Ceylon .............. 31. Canteen ....................
32. April .......................... 33. Wednesday..............

⌘ இலக்கம் 34 முதல் 41 வரை சுருக்கமான விடை தருக.

34. இலங்கையின் தேசிய மரம் எது ? ..............................

35. இலங்கையின் தேசியக் கொடியிலுள்ள சின்னம் எது? ................

36. இலங்கையின் தேசிய கீதத்தை இயற்றியவர் யார்? ..................

37. இலங்கையின் தேயிலை ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள இடம் எது? ..................................................

38. இலங்கையில தேசிய இலச்சினையின் உள்ளவை இரண்டினை எழுதுக?
..............................................................

39. எமது நாட்டின் நிறைவேற்று அதிகாரம் உடையவர் யார்? ...........

40) நமது நாட்டில் காணப்படும் வங்கிகள் இரண்டினை எழுதுக.
1. .................. 2. ..................

41. மா.ந.ச என்ற சுருக்கக் குறியீட்டினை விரித்தெழுதுக
..............................................................

⌘ இல 42 முதல் 47 வரை கூற்றுக்கள் சரியாயின் √ என்றும் பிழையாயின் X என்றும் அடைப்புக்குறிக்குள் எழுதுக.

42. புவியீரப்பு என்பது புவியைநோக்கி இழுத்துக் கொள்ளும் சக்தியாகும். (.......)

43. பத்திரிகை, வானொலி, தொலைபேசி, என்பன தொடர்பாடல் ஊடகங்கள் அல்ல (.......)

44. தையல், வகைகளுள் மீன்முள்ளுத் தையலும் ஒன்றாகும் (.......)

45. இலங்கையின் பிரதான இயற்கைத் துறைமுகம் கொழும்பு (.......)

46. மலோரியா நுளம்பினால் உண்டாகிறது. (.......)

47. செஞ்சிலுவைச் சங்கம், யுனிசெப் என்பன சர்வதேச நிறுவனங்கள் அல்ல (.......)

⌘ இல 48 முதல் 56 வரை விலைப்பட்டியலைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

| பொருள் | ஒன்றின் விலை | விலைப்பட்டியல் | ரூபா.சதம் |
|---|---|---|---|
| அரிசி 1kg | 30.00 | சீனி 1kg | 30.00 |
| தே.எண்ணை 1l | 60.00 | பாண் 1றாத்தல் | 8.50 |
| தீப்பெட்டி 1 டசின் | 24.00 | வெள்ளைத்துணி 1m | 48.00 |
| சன்லைட் 1 | 10.50 | 8 பென்சில்கள் | 34.00 |

48. ஒரு கிலோகிராமும் 250 கிராமும் உடைய அரிசியின் விலை என்ன?
....... ரூபா ....... சதம்

49. சன்லைட் 6 கட்டிகளின் விலை யாது? ....... ரூபா ....... சதம்

50. 750 மில்லி லீற்றர் தேங்காய் எண்ணெயின் விலை யாது?
....... ரூபா ....... சதம்

51. மீற்றர் வெள்ளைத் துணியும் 2 றாத்தல் பாணும் 3பென்சில்களும் வாங்கினால் நீங்கள் கொடுக்க வேண்டிய மொத்தப் பணம் எவ்வளவு?
....... ரூபா ....... சதம்

52. 2 கிலோகிராம் அரிசியும் 500 மி.லீற்றர் தேங்காய் எண்ணையும் 2 டசின் தீப்பெட்டியும் வாங்கிய மாலா ரூபா 200.00 ஐ கடைக்காரனிடம் கொடுத்தாள். அவளுக்கு கிடைக்கும் மீதிப் பணம் எவ்வளவு?
....... ரூபா ....... சதம்

53. 1 மீற்றர் வெள்ளைத் துணி வாங்கும் பணத்திற்கு எவ்வளவு தீப்பெட்டி வாங்கலாம் ....... ரூபா ....... சதம்

54. 4 கிலோகிராம் அரிசி வாங்கும் பணத்திற்கு எத்தனை லீற்றர் தேங்காய் எண்ணைவாங்கலாம்? ....... ரூபா ....... சதம்

55. 1/2 டசின் சன்லைட்டுக்களும், 2 றாத்தல் பாணும் 11/2 kg சீனியும் வாங்கிய மோகன் கடைக்காரனிடம் ரூபா 100 ஐக்கொடுத்தால் அவர் மேலும் எவ்வளவு பணத்தை மோகனிடம் கேட்பார்
....... ரூபா ....... சதம்

⌘ கீழே தரப்பட்டுள்ள பாடலை வாசித்து அதில் கேட்கப்பட்டுள்ள இல 56 முதல் 62 வரையான விடைகளை எதிரேயுள்ள புள்ளிக் கோட்டில் எழுதுக.

ஔவைக்கிழவி நம் கிழவி
அமிழ்தினும் இனிய சொற்கிழவி
செவ்வை நெறிகள் பற்பலவும்
தெரியக் காட்டும் பழங்கிழவி

ஒழுக்காய்க் கவி பாடும்
கனற் கிழவி அவருரையை
நாளும் பொழுதும் மறவாது
நாடிப் பயில்வோம் நம்வாழ்வில்

56. அமிழ்தினும் இனிய சொற்கிழவி யார்? ..........................

57. இந்தப் புலவர் எதற்காக கவி பாடுகிறார்? ......................

58. நாடி பயில்வோம் என்ற வாக்கியத்தின் எழுவாய் எது? ..............

59. சொற்கிழவி என்பதைப் பிரித்தெழுதுக? ..........................

60. ஔவையாரின் சொற்கள் எப்படியானவை? ..........................


61. கவி என்பதற்கு ஒத்தசொல் தருக? ..............................

62. கிழவி என்பதற்கு எதிர்ப்பாற் சொல்லைத் தருக? ..................

⌘ இல 63 முதல் 67 வரை ஒவ்வொன்றையும் ஆங்கில எழுத்துக் குறியீடுகளுடன் திருப்பி எழுதுக.

63. 35 மில்லிலீற்றர் ................ 64. 200 கிலோமீற்றர் ................
65. 850 கிலோமீற்றர்............... 66. 100 சென்ரிமீற்றர் ................

67. கிருசாந்தன் படத்திலுள்ளவாறு உருவொன்றை முற்றத்தில் வரைநது 0 ஆம் இலக்கக் கூட்டில் தொடங்கி இரு கூடுகளைத் தாண்டி முன்னால் உள்ள கூட்டிற்குப் பாய்ந்து பின் பின்னால் உள்ள கூட்டிற்குள் பாய்கின்றான். இவ்வாறு அவன் தொடக்கத்திலிருந்து முன்னாலும் பின்னாலும் பாய்ந்த சில கூடுகளின் இலக்கங்கள் 3, 2, 5, 4, 7, 6 இதற்கேற்ப கிருசாந்தன் 6 வது தடவை முன்னால் பாயும் கூட்டின் இலக்கத்தை எழுதுக.




T.அம்பிகைபாகன் B.Ed Tamil Sp. Trd ஆசிரிய ஆலோசகர், மேல்மாகாணம்

இங்கே மடிக்கவும்





# மாணவர் மலர்

## மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும், மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் 5 மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப்பரீட்சை - 2004

❖ இல 1 முதல் 3 வரை 'அ' நகரத்தின் சனத்தொகை ஆ, இ நகரங்களின் சனத்தொகையின் கூட்டுத்தொகையை விடக்கூடியதாகும். ஆ நகரத்தின் சனத்தொகை - இ நகரத்தின் சனத்தொகையை விடக்கூடியதாகும்


அதன்படி, கீழே காணப்படும் ஒவ்வொரு கூற்றும் சரியாயின் (√) என்றும்,பிழையாயின் (X) என்றும் எதிரேயுள்ள அடைப்புக்குறிக்குள் அடையாளம் இடுக.

1. மிகக் குறைந்த சனத்தொகை உள்ள நகரம் 'இ' ஆகும். ( )


2. 'ஆ' நகரத்தின் சனத்தொகை 'அ', 'இ' நகரங்களின் சனத்தொகையின் கூட்டுத்தொகையைவிடக் கூடியதாகும். ( )

3. மிகக் கூடிய சனத்தொகையிருப்பது 'அ' நகரத்திலாகும். ( )


❖ இல 4 முதல் 7 வரை இஞ்சியின் வளர்ச்சிக் கட்டங்கள் ஒழுங்கின்றித் தரப்பட்டுள்ளன. 1,2,3, இலக்கங்களைக் கூட்டினுள் இட்டு ஒழுங்குபடுத்துக.



5. வெள்ளைப் பூண்டி வளர்ச்சிக் கட்டங்கள் ஒழுங்கின்றித் தரப்பட்டுள்ளன 1,2,3, இலக்கங்களைக் கூட்டினுள் இட்டு ஒழுங்கு படுத்துக.



❖ இல 6 முதல் - 11வரை காணப்படும் ஒவ்வொரு வினாவிற்கும் உரிய விடையைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.




6. இந்த உருவின் சுற்றளவு யாது?
............................................

7. 'VII' நான்கு தீக்குச்சிகள் கொண்டு அமைக்கப்பட்ட ஓர் உரோமன் இலக்கம் இங்கு காண்பிக்கப்படுகிறது. அதேபோல் நான்கு தீக்குச்சிகளைப் பயன்படுத்தி ஆக்கத்தக்க வேறு உரோமன் இலக்கம் தருக?
..............................................................

8. விமல் கிரிக்கெட்டும் கரைப்பந்தாட்டமும் விளையாட விரும்பாதவர், எனினும் காற்பந்து விளையாடுவதில் விருப்பமுடையவர். தர்சி, சகல விளையாட்டுக்களிலும் விருப்பங்கொண்டவர். விமலும் தர்சினியும் விரும்பும் விளையாட்டுயாது?
..............................................................

9. ஒருபக்க நீளம் 4 cm கொண்ட இரும்பாலான சதுரமுகியின் நிறை 100 கிராம் ஆகும். அதன்படி ஒருபக்க நீளம் 1cm கொண்ட இரும்பாலான சதுரமுகியின் நிறையாது?
..............................................................


10. ரவியிடம் 10 நாணயங்கள் உள்ளன. அவை ரூபா 5,2 நாணயக் குற்றிகளாக மாத்திரம் இருந்தன. அவனிடம் உள்ள ரூபா 2 நாணயங்களின் பெறுமதி ரூபா 10 எனின், அவனிடமுள்ள ரூபா 5 நாணயங்களின் பெறுமதி யாது?

..............................................................


11. ஒரு மேசையின் மீது பந்து ஒன்று உண்டு. அந்தப் பந்தினுள் நீல நிறப் பந்துகள் 4உம், மஞ்சள் நிறப் பந்துகள் 6 உம் உண்டு. இப்போது மேசையின் மீதுள்ள மொத்தப் பந்துகள் எத்தனை?
..............................................................

❖ இல 12 முதல் 15 வரை தரப்பட்டுள்ள பிராணிகள் உண்ணக்கூடிய உணவுகள் தரப்பட்டுள்ளன. அம்புக்குறியினால் தொடர்புபடுத்திக் காட்டுக.

12.
13.
14.
15.



❖ இல 16 முதல் 18 வரை கூண்டினுள் சில திண்மங்கள் காணப்படுகின்றன. அவ்வுருவப் படங்களை அவதானித்துப் பார்த்து அறிவுறுத்தல்களின்படி செயற்படுக.



16. அதிக உச்சிகள் கொண்ட திண்மத்தைச் சுற்றி வட்டமிடுக.
17. உச்சி இல்லாத திண்மத்தின் மீது x புள்ளடி இடுக.
18. நான்கு முகங்கள் கொண்ட திண்மத்தின் மீது √ அடையாளமிடுக.

❖ இல 19 முதல் 20 வரையுள்ள வினாக்களுக்கு பின்வரும் பாடசாலை வாசித்து வினாக்களுக்குரிய பொருத்தமான விடையைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுக.


'அம்புலியை வா வா என்றோம் அந்தக்காலம்
அம்புலிக்குச் சென்று வந்தோம் இந்தக்காலம்

19. இந்தப் பாடலில் இடம்பெற்ற 'அம்புலி' என்ற சொல்லுக்கு ஒத்த கருத்துள்ள சொல்
(1) திங்கள் (2)நட்சத்திரம் (3)நிலா (4)சந்திரன்


20. வானில் அம்புலி பூரணமாகத் தெரியும் நாள்
(1) பௌர்ணமி (2)அமாவாசை (3)அட்டமி (4)நவமி


❖ இல 21 முதல் 23 வரை ஒவ்வொரு வினாவிலும் வெற்றிக் கூண்டுக்குப் பொருத்தமான உருவைத் தந்துள்ள நான்கு விடைகளிலிருந்து தெரிந்து அதன் கீழ் கோடிடுக.

21.



(1) (2) (3) (4)

22.

(1) (2) (3) (4)


23.

(1) (2) (3) (4)

❖ இல 24 முதல் 26 வரை தரப்பட்டுள்ள கூற்றுக்களில் தனிப்பட்ட கருத்துக்கு முக்கியத்துவம் வழங்கி அமைந்துள்ள கூற்றைத் தெரிந்து அதன் இலக்கத்தை வெற்றுக்கூட்டினுள் இடுக.

24.
(1) டெங்குக் காய்ச்சல் நுளம்பினால் ஏற்படும்
(2) இறைச்சியில் புரதம் அதிகம் உண்டு
(3) இரவுநேரங்களில் பாழான பாதைகளில் பயணஞ் செய்வது அவ்வளவு சிறந்ததல்ல.
(4) இலங்கையில் உள்ள உயர்ந்த மலை பீதுருதாலகால மலை ஆகும்.

25.
(1) வாகனங்களிலிருந்து வெளியேற்றப்படும் புகையினால் சுற்றாடல் மாசுபடும்.
(2) தொற்றுநோய் ஏற்பட்டதும் அடுத்தவர்களிலிருந்து விலகி இருக்க வேண்டும்.
(3) தினமும் சூரியன் உதிப்பது கிழக்குத் திசையிலாகும்.
(4) அன்னாசி மிக சுவையான ஒரு பழவர்க்கமாகும்.


26. இவ்வுரு காட்டும் கார்ட்போர்ட் அட்டையைப் புள்ளிக்கோட்டின் ஊடே மடித்து ஒட்டுவதன் மூலம் உண்டாக்கத்தக்க சதுரமுகியைக் காட்டும் உரு எதுவெனக் கண்டுபிடித்து அதன் இலக்கத்தை வெற்றுக்கூட்டினுள் இடுக.


(1) (2) (3) (4)


♦ இல. 01 முதல் 5 வரை கோடிடப்பட்ட சொல்லின் ஒத்த சொல்லைத் தெரிந்து சரியான விடையின் கீழ் கோடிடுக.
1. எல்லா இடையூறுகளையும் தாண்டி அவன் முன்னேறினான்.
(மகிழ்ச்சி, ஆனந்தம், துன்பம், சந்தோசம்)
2. சில மாணவர்கள் படிப்பில் சோர்வு காட்டுகின்றனர்
(இக்கரை, சுறுசுறுப்பின்மை, சோம்பல், சுறுசுறுப்பு)
3. அவன் கால்நடைகளை வைத்து மேய்த்துக் கொண்டிருந்தான்.
(கோழி, சேவல்கள், ஆடு-மாடு, மான்-மரைகள், புலி-சிங்கங்கள்)
4. காந்தத்தின் செறிவு கூடிய பகுதி எது?
(ஓரங்கள், முனைவுகள், எல்லாப்பாகமும், நடுப்பாகம்)
5. நலிந்த தண்டுடைய தாவரம் எது?
(வேம்பு, தென்னை, சூரியகாந்தி, கத்தாப்பு)


♦ இல. 06 முதல் 10 வரையுள்ள வினாக்களில் "அ" பகுதிக்குப் பொருத்தமான விடையை "ஆ" பகுதியில் இருந்து தெரிவு செய்து அதன் இலக்கத்தை வெற்றுக்கூட்டினுள் எழுதுக.

| "அ" | | "ஆ" |
|---|---|---|
| 6. எரிபொருள் சுத்திகரிப்பு நிலையம் | ☐ | 1. அநுராதபுரம் |
| 7. இலங்கையில் வெளியாகும் ஒரு தினசரி | ☐ | 2. சப்புகஸ்கந்த |
| 8. எமது நாட்டின் முதலாவது இராசதானி | ☐ | 3. வீரகேசரி |
| 9. புற்றுநோய் வைத்தியசாலை அமைந்துள்ள இடம் | ☐ | 4. சிங்கராஜக்காடு |
| 10. இலங்கையின் பிரதான தேசிய வனம் | ☐ | 5. மகரகம |

11. அருகில் தரப்பட்ட உருவில் நிழற்றப்பட்ட பகுதி முழு உருவின் என்ன பின்னம்?

..........................................

♦ ஒரே தடவையில் இரண்டு மின்குமிழ்களை ஒளிரச் செய்யும் முறையை கீழுள்ள உரு காட்டுகின்றது. இதைப் பயன்படுத்திக் கீழே கேட்கப் படும் வினாக்களுக்குரிய விடையை இல.12 முதல் 16 வரை எழுதுக




12. A குறிக்கும் பொருளின் பெயரென்ன? ..............................
13. மின் குமிழ்கள் ஒளிர்ந்தனவா? ஒளிர வில்லையா? ..........................
14. மின்குமிழைக் கண்டு பிடித்தவர் யார்? ..........................
15. மின்குமிழ்கள் சமாந்தர நிலையிலா தொடர் நிலையிலா காணப் படுகின்றன? ..........................
16. மின்குமிழை மின்கலத்துடன் இணைக்கப்பயன்படுவது எது? ........
17.  இவ்வுருவிருந்து எத்தனை முக்கோணிகளைப் பெறலாம்? ..........................
18. 
(1) (2) (3)
மேலுள்ள கோலம் போன்று தொடர்ந்து செல்லும் போது ஆறாவது கோலத்தில் உள்ள புள்ளிகளின் எண்ணிக்கை யாது? (சரியான விடையின் கீழ் கோடிடுக)
(1) 30 (2) 28 (3) 24 (4) 42

19. ஒரு கூட்டில் 15 மஞ்சள் வர்ணக்குருவிகளும் 17 நீலவர்ணக் குருவிகளும் சில பச்சைக்குருவிகளும் இருந்தன. அங்கு பச்சை வர்ணக்குருவிகளின் எண்ணிக்கை மஞ்சள் வர்ணக்குருவிகளைவிட கூடுதலாகவும் நீலவர்ணக்குருவிகளை விடக் குறைவாகவும் இருந்தன. எனின் கூட்டிலிருந்த குருவிகளின் மொத்த எண்ணிக்கை யாது?
..........................................

20. நீலம், சிவப்பு, மஞ்சள் எனும் கொடிகள் முறையே மாறிமாறிக் கட்டப்பட்டுள்ள ஒரு கொடிக் கயிற்றில் முதலாவது கொடியின் நிறம் நீலம் ஆகும். 79 ஆவது கொடியின் நிறம் யாது?
..........................................


♦ இல. 22 முதல் 25 வரையுள்ள வினாக்களில் பின்வரும் கூற்றுக்களுக்குப் பொருத்தமான விடையைக் கீழேயுள்ள நான்கு சொற்களிலிருந்து தெரிவுசெய்து அதன் கீழ் கோடிடுக.
21. ஒளிபுகக்கூடிய தோலுடைய விலங்கு
(1) மண்புழு (2) பாம்பு (3) மனிதன் (4) நத்தை
22. பாதுகாப்பற்ற உணவு, நீர் காரணமாக ஏற்படாத நோய்
(1) கொலரா (2) போலியோ (3) வயிற்றோட்டம் (4) தைபோயிட்
23. தலைகீழாகத் தொங்கிக் கொண்டு உறங்குவது எது?
(1) ஆந்தை (2) வெளவால் (3) குயில் (4) தீக்கோழி
24. சூரியனைச் சுற்றியுள்ள ஒன்பது கோள்களுள் மிகச் சிறிய கிரகம்எது?
(1) வியாழன் (2) சனி (3) புதன் (4) சுக்கிரன்
25. பௌத்தர்களின் புனித நூல் எது?
(1) திரிபீடகம் (2) திருக்குர்ஆன் (3) வேத சிவாகமம் (4) பைபிள்

♦ இல. 26 முதல் 30 வரை சரியாயின் (√) எனவும் பிழையாயின் (X) எனவும் அடையாளம் இடுக.
26. கிளி ஒன்றின் மாதிரி உருவத்தை செய்வதற்கு மிகப் பொருத்தமான மூலப்பொருள் குருத்தோலை ஆகும். ( )
27. ஒரு பதிவு செய்யப்பட்ட கடிதத்தை அஞ்சலில் இடுவதற்கு ரூபா 16.50 சதமுத்திரையை ஒட்டுதல் வேண்டும். ( )
28. யூரியா உரத்தில் பொசுபரசு அதிகளவில் அடங்கியுள்ளது. ( )
29. எண்பதாவது ஆண்டு முடிவில் கொண்டாடப்படுவது பவள விழா வாகும். ( )
30. இலங்கையின் தேசிய பறவை அன்னமாகும். ( )

இங்கே மடிக்கவும்




♦ ஒரு வியாபாரி 5 நாட்களில் விற்றபாலின் அளவு தொடர்பான வரைபு கீழே தரப்பட்டுள்ளது. இந்த வரைபின் உதவியுடன் 31 - 35 வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.





31. திங்கட்கிழமை விற்றபாலின் அளவு எவ்வளவு? (.......... லீற்றர்)
32. ஞாயிறு, திங்கள் விற்றபாலின் மொத்த அளவு எவ்வளவு? (..........லீற்றர்)
33. சமமான பால் விற்பனை செய்யப்பட்ட நாட்கள் எவை? (.......... லீற்றர்)
34. ஐந்து நாட்களும் விற்ற பாலின் மொத்த அளவு யாது? (.......... லீற்றர்)
35. ஒரு லீற்றர் பாலின் விலை ரூபா 30 எனின் செவ்வாய்க்கிழமை விற்ற பாலினால் கிடைக்கும் வருமானம் யாது? (..........லீற்றர்)

இல 36 முதல் 40 வரையுள்ள வினாக்களில் முதல் உருவுடன் கருத்து நிறைந்த தொடர்புள்ள உருவை பின்னர் உள்ள நான்கு உருக்களிலிருந்து தெரிந்து அதன் கீழ் கோடிடுக.

36. 
(1) (2) (3) (4)

37. 
(1) (2) (3) (4)

38. 
(1) (2) (3) (4)

39. 
(1) (2) (3) (4)

40. 
(1) (2) (3) (4)

⌘ பின்வரும் பகுதியை வாசித்து இல 01 முதல் 10 வரையுள்ள வினாக் களுக்குரிய விடையைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

வீட்டுக் கூரையின் மேலிருந்த எலிக்குஞ்சொன்று களிமண் உருண்டையைப் போல் காட்சியளித்தது. அங்கு வந்த வெள்ளைநிறப் பூனை சுற்று முற்றும் பார்த்தது. அது சிறிதேனும் அப்பக்கத்தைப் பார்த்திருந்தால் தன்னை இரையாக்குவதற்கு குறிபார்த்திருக்கும் அந்தப் பூனையைக் கண்டிருக்கும் புலி போன்ற சாயலை உடைய அந்தப் பூனை களிமண் உருண்டை போன்ற எலியை அந்த வேளையில் பிடித்துக் கொண்டது. எலிகீச் கீச் என்று அலறியது.

1. இந்தப் பந்தியில் குறிப்பிட்டுள்ள பிராணிகள் எவை? ..........................
2. எலிக்குஞ்சு எங்கே காணப்பட்டது? ..........................
3. களிமண் உருண்டையைப் போல் இருந்தது எது? ..........................
4. இந்தப் பந்தியில் உள்ள இணை மொழி ஒன்றினை எழுதுக? ..........
5. இந்தப் பந்தியில் உள்ள உவமைத் தொடர் ஒன்றினை எழுதுக?
..........................................
6) உருண்டை என்ற சொல்லின் பன்மைச் சொல்லை எழுதுக.?
..........................................
7) இந்தப் பந்தியிலுள்ள வினைச் சொற்கள் இரண்டினை எழுதுக.
1)........................ 2)........................
8) காட்சியளித்தது என்பதன் எதிர்மறைச் சொல்லை எழுதுங்கள்
..........................................
9) இந்தப் பகுதியிலுள்ள ஒலிக்குறிப்புச் சொல் ஒன்றினை எழுதுக
..........................................
10) எலிக்குஞ்சொன்று என்பதை பிரித்து எழுதுக.
..........................................

⌘ சாரங்கன் என்ற மாணவன் தன்னைச் சுற்றி விளையாட்டுப் பொருள் களை எவ்வாறு காட்சிக்கு வைத்தான் என்பது கீழே காட்டப்பட்டுள்ளது. சாரங்கன் கார் இருக்கும் திசையை நோக்கி அமர்ந்திருக்கிறான். இல 11 முதல் 15 வரை பின்வரும் படத்தைப் பார்த்து விடை தருக.

| | | |
|---|---|---|
| 200.00 | ? | ? |
| பேருந்து | கார் | சைக்கிள் |
| 300.00 | | 300.00 |
| ஆகாயவிமானம் | சாரங்கன் | புகையிரதம் |
| 180.00 | | 350.00 |
| மாட்டுவண்டி | | லொறி |
| | 250.00 | |
| | கப்பல் | |

11. சாரங்கன் வடக்குத் திசையில் வைத்த பொருள் எது? ..........
12. சாரங்கன் சைக்கிளை எத்திசையில் வைத்தான்? ..........
13. சாரங்கனின் பின் புறத்தில் காணப்படும் பொருள் எது? ..........
14. சாரங்கன் வைத்த விளையாட்டுப் பொருட்களின் நீர்வழிப்போக்கு வரத்துச் சாதனம் எது? ..........
15. பேருந்தின் விலை ரூபா 200 ஆகும். அவன் சைக்கிளை வாங்குவ தற்கு பேருந்தின் விலையின் 3/4 பங்கைச் செலவிட்டால சைக்கி ளின் விலை யாது? ..........

⌘ இல 16 முதல் 17 வரை பின்வரும் பாடல்கள் பாடப்படும் சந்தர்ப்பங்களின் பெயர்களை எழுதுக.
16. ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே ..........................
17. "ஆலையிலே சோலையிலே
அறுகம் பாடிய சந்தையிலே
கிட்டிப்புள்ளும் பம்பரமும்
கிறுகிடிக்கப் பாலாறு ..........................

⌘ இலக்கம் 18 முதல் 26 வரையிலான வினாக்களுக்கு "அ" பகுதிக்குப் பொருத்தமானவற்றை "ஆ" பகுதியில் இருந்து தெரிந்து அதன் எழுத்தை அடைப்புக்குறிக்குள் இடுக.

| "அ" | | "ஆ" |
|---|---|---|
| 18. வானத்தில் காணப்படும் அதிசயங்கள் | ( ) | A உறுகுணை, மாயரட்டை |
| 19. மருந்து மூலிகைகள் | ( ) | B மரந்நாத்தல் கிருமிநாசினி பாவனை பொலித்தீனைசூழலில் இடல். |
| 20. இலங்கையின் புராதன இராசதானிகள் | ( ) | C வானவில்வால்நட்சத்திரம் |
| 21. ஒரு வித்திலைத் தாவரங்கள் | ( ) | D பெரியநாய், தேள் சிறியகரடி |
| 22. மனிதனால் சூழலுக்கு விளை விக்கப்படும் தாக்கங்கள் | ( ) | E பனை கமுகு தென்னை |
| 23. பூமியில் காணக்கூடிய ஆச்சரிய மிக்க விடயங்கள் | ( ) | F இஞ்சி, நன்னாரி பொன்னாவரை |
| 24. நட்சத்திரக் கோலங்களுள் சில | ( ) | G பாகஸ், இணையம் மின்அஞ்சல் |
| 25. நவீனமான தொடர்பாடல் ஊடகங்கள் | ( ) | H பூமியதிர்ச்சி, எரிமலை, பனிமலை |

# மறுக்கப்பட்ட உரிமைகளைப் பெற்றுக்கொள்ளவே சிறுபான்மை இனம் ஆயுதமேந்தும் தேவை ஏற்பட்டது

## சிவனேசன் எம்.பி.தெரிவிப்பு

மாறிமாறி இனவாதம் பேசி, அந்த இனவாதத்தின் ஊடாக சிறுபான்மை மக்கள் வாழ்கின்ற பகுதிகளிலே அந்த மக்களை அடக்கி, ஒடுக்கி அவர்களுடைய உரிமைகளை மறுதலித்து, அவர்களுடைய உரிமைகளை வழங்காமல், அவர்களுடைய நிர்வாகத்துக்கான ஒழுங்குகளை மேற்கொள்ளாமல் இருந்த காரணத்தினால் தான் - அந்தச சிறுபான்மை இனம் தனக்கான உரிமையைப் பெற்றுக்கொள்வதற்காக ஆயுதம் ஏந்திய போராடுகின்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதென்பதை இந்த மன்றுக்குத் தெரியப்படுத்த விரும்புகின்றேன் என நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசன் தெரிவித்தார்.

அண்மையில் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற டெங்கு நோய் விவாதத்தின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்-

இந்த ஆயுதப் போராட்டத்தின் விளைவாக இன்று தமிழ் பேசுகின்ற பிரதேசங்கள் அனைத்தும் முகாம்கள் குழியுமாகக் காட்சிதருகின்றன. சுகாதார வசதியற்று அவை சீரழிந்து கிடக்கின்றன.

உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் இராணுவ முகாம்கள் அங்கு நிறுவப்பட்டிருக்கின்ற காரணத்தினால் - அங்கே இருக்கின்ற மக்கள் எல்லாம் தங்களுடைய வீடுகளை, சொந்த நிலங்களை இழந்து இன்றும் சிறுசிறு குடிசைகளில், எதுவித சுகாதார வசதியும் அற்ற சூழலில் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள். அங்கு நிலைமை இப்படி இருக்கின்றவேளை இங்கு விவாதிக்கப்படுகின்ற இந்த டெங்கு நோயை எங்களுடைய பிரதேசங்களில் எப்படிக் கட்டுப்படுத்தப்போகிறீர்கள் எனபதைத் தான் நாங்கள் சிந்திக்க வேண்டும்.

அங்கிருக்கின்ற மக்கள் மீண்டும் தங்களுடைய சொந்த இடங்களுக்குச் செல்லவேண்டும், சொந்த வீடுகளில் வாழவேண்டும். தமது சொந்த வீடுகளில் தமக்கான வசதிகளை ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். அவ்வாறான ஒரு சூழ்நிலையில்தான் இந்தத் திட்டங்கள் அனைத்தும் வெற்றிபெறக்கூடும்.

எனவேதான், அங்கு சீரழிந்த வாழ்க்கை நடத்துகின்ற எங்களுடைய மக்களின் நிலைமை நன்குணர்ந்து, அவர்கள் மீண்டும் தங்களுடைய நிலத்துக்கு, தங்களுடைய வீடுகளுக்குச் செல்வதற்கான வழிவகைகளை இந்த அரசு செய்ய வேண்டும் எனபதை இந்த இடத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

போரினால் குண்டுவீசப்பட்டு பள்ளமான இடங்களிலே நீர் தேங்கி இருப்பதனால் அங்கு நோய் தொற்றுநோய்க் காவிகளின் வளர்ச்சி ஏற்படுகின்றது. சுற்றாடலைப் பாதுகாக்கும் மரங்கள் பல்லாயிரக்கணக்கில் அழிக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக வடக்கு- கிழக்கு மாகாணத்தில் 25 லட்சம் பனை மரங்கள் தறிக்கப்பட்டிருக்கின்றன.

இந்த மரங்களில் கணிசமானவை இராணுவத்தின் பாதுகாப்பு அரண்களுக்குப் பயன்படுத்துவதற்காகத் தறிக்கப்பட்டிருக்கின்றன. அதுபோல 19 லட்சம் தென்னை மரங்கள் தறிக்கப்பட்டிருக்கின்றன.

இந்த நிலையில், இவை அனைத்தும் இராணுவத்தின் பாதுகாப்பு அரண்களுக்குப் பாவிக்கப்பட்டிருக்கின்றன. இந்த நிலைமையினால் அங்கு சூழல் பாதுகாப்பில்லாத நிலையும், சூழல் அசுத்தமான நிலையும் ஏற்பட்டிருப்பதுடன் அந்த வளங்களின் அழிவினால் பொருளாதாரப் பின்னடைவையும் நாங்கள் எதிர்நோக்கியிருக்கின்றோம்.

அந்த இடங்களில் போதிய ஊட்டச்சத்தில்லாத நிலையில் வாழ்ந்துகொண்டிருக்கின்ற மக்களாக, சுகாதார வசதிகள் அற்றவர்களாக வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். இவ்வாறான மிகுந்த நெருக்கடியான சூழலில் சுகாதார வசதிகள் இன்றி வாழும் மக்கள் நல்ல சுகவாழ்வை அனுபவிக்கவேண்டுமானால், முதலில் நலன்புரி நிலையங்களில் இருக்கின்ற மக்கள் தங்களது இல்லிடங்களுக்குச் செல்லவேண்டும்.

இன்று இந்த இடங்களில் வாழ்ந்துகொண்டிருக்கின்ற மக்கள், தமிழீழ விடுதலைப் புலிகளினால் நடாத்தப்படுகின்ற சுகாதாரத் துறையினூடாகவே காப்பாற்றப்படுகின்றார்கள் என்ற செய்தியை இந்த மன்றுக்கு நான் தெரியப்படுத்தவேண்டிய தேவை இருக்கின்றது.

அங்கு அவர்களால் நடத்தப்படுகின்ற திலீபன் மருத்துவமனையூடாகப் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு சுகாதார வசதிகளையும், வைத்திய வசதிகளையும் வழங்கிக்கொண்டிருக்கின்றார்கள். இந்த நிலையில்தான் எங்களுடைய பிரதேசம் இருக்கின்றது.

எனவே, இவ்வாறான ஒரு சூழ்நிலையை மாற்றவேண்டுமென்றால், அந்தப் பகுதிகள் அபிவிருத்தியடையவேண்டுமென்றால், இனப்பிரச்சினை தீர்க்கப்படவேண்டும். இந்த அரசு பதவியேற்று இன்று மூன்று மாதங்களுக்கு மேல் ஆகிவிட்டது. எங்களது இனப்பிரச்சினை என்பது இன்று பூதாகரமாக இன்னும் தீர்க்கப்படாத ஒரு விடயமாக இருந்துவருகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினராகிய நாங்கள் தமிழீழ விடுதலைப்



புலிகளைத் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளாக ஏற்றிருக்கிறோம். அதையே மக்கள் ஆதரித்து வாக்களித்திருக்கின்றார்கள். எனவே, அவ்வாறான அந்த ஏகப்பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி எமது மக்களுடைய சுகவாழ்வுக்கு வழிசெய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

டெங்கு நோயினால் ஒரு குறிப்பிட்டளவு மக்கள் இறந்துவிட்டார்கள் என்பதற்காக இன்று இந்த விவாதத்தை நாங்கள் இங்கே நடத்திக்கொண்டிருக்கின்றோம். ஆனால், கடந்த 20 ஆண்டுகளாக பல்லாயிரக்கணக்கான மக்கள் இந்த மண்ணில் போரினால் மடிந்துகொண்டிருக்கின்றார்கள். இந்த இனவாத நோயை நாங்கள் எல்லோரும் சேர்ந்து ஒழித்தால் தான் இந்த நாட்டிலே சாந்தியும் சமாதானமும் நிலைக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.(13)

### வெட்டப்பட்ட மாட்டின் இரைப்பையில் மின் வயர்கள்

அச்சுவேலியில் அமைந்துள்ள கொல்களத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று இறைச்சிக்காக வெட்டப்பட்ட மாட்டின் இரப்பையில் சுமார் 20 கிலோ எடையுள்ள மின்சார வயர்கள் நிரம்பிக்காணப்பட்டன. இதைப் பெருந்திரளான மக்கள் கூடி நின்று பார்வையிட்டார்கள். (90)

### குமார் பொன்னம்பலத்தின் நினைவுதினம்

(யாழ்ப்பாணம்)

மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் நினைவுதினக் கூட்டம் நாளை காலை 10 மணியளவில் 43, 4 ஆம் குறுக்குத்தெருவில் அமைந்துள்ள காங்கிரஸ் கட்சி அலுவலகத்தில், கட்சித் தலைவர் அ.விநாயகமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது. (64)

### சூரிய மின்கலத்தின்மூலம் வீடுகளுக்கு மின்சாரம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவுப் பிரதேசத்தில் சூரிய மின்கலங்கள் மூலம் வீட்டு மின் சுற்று அமைக்கப்பட்டுவருகின்றது. கரைச்சி தெற்கு பல.நோ.கூ. சங்கத்தின் அனுசரணையுடன் செல்கோ நிறுவனமே இந்தச் சேவையை மேற்கொண்டு வருகின்றது. ஒரே தடவையிலும் அன்றி தவணையடிப்படையிலும் இதற்கான பெறுமதியைச் செலுததக்கூடிய வகையிலே ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

இதுவரைக்கும் 20 இற்கும் மேற்பட்டோர் இந்த இணைப்பைப் பெற்று பயன்பெற்றுள்ளதுடன், மேலும் பலர் இந்த இணைப்பைப் பெறுவதற்கு விண்ணப்பித்துள்ளமையும் இங்கே குறிப்பிடத்தக்கதாகும். (113)

## காதலர் பூங்காவாக மாறும் அன்னசத்திர ஒழுங்கை!

யாழ்.அன்னசத்திர ஒழுங்கை- பாடசாலைகள் முடிவுறும் நேரமும், மாலை ஐந்து மணிக்குப் பின்னரும் காதலர் பூங்காவாக மாறிவருகிறது. காதலர்கள் பகுதிபகுதியாக ஒழுங்கையின் முடக்குகளில் - மோட்டார் சைக்கிள் மற்றும் துவிச்சக்கர வண்டியில்வரும் ஆண்களும், பெண்களுமாகச் சந்தித்துப் பேசுகின்றனர்.

அதனால் அப்பகுதியால் செல்லும் பயணிகள் பெரும் அதிர்ச்சியும், வேதனையும் அடைகிறார்கள்.

மேலும் அப்பகுதியில் வசிக்கும் மக்களும் இவர்களின் நடவடிக்கைகளைக்கணடு மிகவும் மனவேதனை அடைகின்றதுடன், தட்டிக கேட்கமுடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது என விசனம் தெரிவித்தனர். இதனை கலாசாரம் பேணும் குழுவினர் கவனிப்பார்களா? என அவர்கள் தெரிவித்தனர். (64)

## கால்நடைகளைக் காப்பாற்ற உதவுமாறு கோரிக்கை!

இதுவரை மீளக்குடியேற அனுமதிக்கப்படாத தனங்களப்பு, மறவன்புலவு பகுதி விவசாயிகளது கால்நடைகளை அடாத்தாகப் பிடித்துக் கடத்தி விற்பனை செய்துவரும் நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்த உதவுமாறு - தனங்களப்பு, மறவன் புலவு விவசாய சம்மேளனங்கள் - அரச அதிபர் மற்றும் யாழ். மாவட்ட இராணுவத் தளபதி ஆகியோரிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

எமது சொந்த இடங்களில் நாம் மீளக்குடியேறும்வரை தமது விவசாயத் தொழிலுக்கும ஜவனோபாயத்துக்கும் அவசியமான கால்நடைகளை தமது நிலங்களிலேயே வளர்க்க அனுமதிக்கும்படியும் அவர்கள் கேட்டிருக்கின்றனர்.

மறவன்புலவு, தனங்களப்பு, கைதடி, நாவற்குழி ஆகிய விவசாய சம்மேளனப் பகுதிகளின்கீழ் இதுவரை ஏறக்குறைய 2 ஆயிரத்து ஐநூறு ஏக்கர் வரையிலான வளமான நிலம் நெற்செய்கைக்கு அனுமதிக்கப்படாதிருப்பது குறிப்பிடத்தக்கது. (31)

## மாமுனை - கட்டைக்காடு வீதி திருத்தவேலைகள் ஆரம்பம்!

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மாமுனை தொடக்கம் வெற்றிலைக்கேணி வரையுள்ள கடற்கரை வீதி, களிமண் ஊரிபோட்டு திருத்தவேலைகள் நடைபெற்று வருகின்றன.

நிகொட் நிறுவனத்தின் உதவியுடன் நடைபெற்றுவரும் களிமண் வீதிதிருத்த வேலைகள் மழைகாலத்துக்கு முன் திருத்தி முடிக்கப்படாவிடின் அந்தப் பாதையால் வாகனப் போக்குவரத்து செய்யமுடியாத நிலை ஏற்படும்.

சம்பந்தப்பட்டவர்கள் மழைகாலம் தொடங்குவதற்கு முன் களிமண் வீதி வேலைகளை முடிப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டால் இந்தப் பிரதேச மக்களின் பிரயாண கஷ்டங்கள் நீங்க வாய்ப்பு ஏற்படுமென அந்தப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்



பெயர் : க.இந்துஜா
முகவரி : நாகர்கோயில் மேற்கு

நான்காவது அகவையில்



பெயர் : உ.பவித்திரன்
முகவரி : ஆனந்தபுரம், கிளிநொச்சி

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :------------------
முகவரி :------------------
பிறந்த ஆண்டு:------------------

கூப்பன்கள் பத்தும் புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

பெற்றோர் ஒப்பம்


## கடலோட்டு இயந்திரவியல் கல்லூரிக்கு விண்ணப்பித்த யுவதிகளுக்கு நேர்முகத்தேர்வு

யாழ்.கடலோட்டு இயந்திரவியல் கல்லூரியில் புதிதாக கடலக தொழில் நுட்பப்பயிற்சி நெறிகளை கற்க விண்ணப்பித்துள்ள பெண்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 16 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கல்லூரி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

தெரிவாகும் பயிற்சியாளர்கள் பயிற்சியை மேற்கொள்ளும் காலங்களில் ஊக்குவிப்புத் தொகையாக நாளொன்றுக்கு நூறு ரூபா வீதம் வழங்கப்படவுள்ளது.

இதற்கான நிதியை அரச அதிபருடாக ஜீ.ரீ.இசற் நிறுவனம் வழங்குவது குறிப்பிடத்தக்கது. (206)

### சந்நிதியான் ஆச்சிரமத்தில் சிறப்பு நிகழ்வு

புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி இந்துமாமன்றம் நடத்தும் சிறப்பு நிகழ்வுகள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் 'இந்து சமயத்தின் இன்றைய செல் செல் நெறி' எனும் தலைப்பில் இந்தக் கல்லூரியின் மாணவன் பு.ரஜீபன் உரைநிகழ்த்தவுள்ளார். தொடர்ந்து ஆசிரியர் செவ்வந்திநாதக் குருக்களின் இசைக் கச்சேரியும் இடம்பெறும்.

### கொடுப்பனவு வழங்கப்படவில்லை

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மீளக்குடியேறிய சுமார் 1064 குடும்பங்களுக்கு மட்டும் மீள்குடியமர்வுக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

மிகுதியான குடும்பங்கள் மீள்குடியமர்வுக் கொடுப்பனவைப் பெறுவதற்கு உரிய படிவங்கள் பூர்த்தி செய்யப்பட்டு பல மாதங்கள் கடந்த நிலையிலும் இதுவரை கொடுப்பனவு வழங்கப்படவில்லை.

### திருத்தப்படாத மதகில் மழைநீர் தேக்கம்

ஐந்தாம்குறுக்குத்தெரு வீதியில் சப்பல் தெருவுக்கு குறுக்கே உள்ள மதகு கடந்த பல வருடங்களாக உடைந்த நிலையில் மழைகாலங்களில நீர் வழிந்தோடமுடியாத நிலையில் போக்குவரத்துக்கு மிகவும் இடைஞ்சலாக இருப்பதாகப் பாதசாரிகள் விசனம் தெரிவித்தனர்.

### கால்நடைகளை வெட்டுவது தற்காலிகமாக இடைநிறுத்தம்

கால்நடைகளுக்கு கால்வாய் நோய் மிகவேகமாகப் பரவிவரும் காரணத்தால், கால்நடைகளை இறைச்சிக்காக வெட்டுவதை மறு அறிவித்தல்வரை இடைநிறுத்திவைக்குமாறு வலி.கிழக்கு பிரதேச கால்நடை வைத்திய அதிகாரி தமது பிரிவு அனைத்து சுகாதாரப் பரிசோதகர்களுக்குப் பணித்துள்ளார். (90)



இமையாணன் மேற்கு உடுப்பிட்டி விநாயகர் சனசமூக நிலையம், போரூட் அனுசரணையுடன் நடத்திய விநாயகர் முன்பள்ளிச் சிறார்களின் விளையாட்டு விழாவில், முன்பள்ளிச் சிறார்கள் அணிவகுப்புச் செய்வதையும், முன்பள்ளி போசகர் செல்வராசா அணிவகுப்பை ஏற்பதையும் படத்தில் காணலாம். (116)

# சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தை புலிகள் சரியாகப் பின்பற்றுகின்றனர்

## செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகள் தெரிவிப்பு



செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதியுடன் காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன்



(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு, தமிழீழ காவல்துறை என்பன மனித உரிமைகளுக்கு மதிப்பளித்து செயற்பட்டுவருகின்றன என, அண்மையில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளுக்கும் தமிழீழ காவல்துறையினருக்கும் இடையில் கிளிநொச்சியில் இடம்பெற்ற சந்திப்பின்போது சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் பாராட்டுத் தெரிவித்தனர்.

இந்தச் சந்திப்பில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப்பிரதிநிதிகளால் முன்வைக்கப்பட்ட கருத்துக்கள் வருமாறு -

உண்மையில் இங்கு மனித உரிமைகள் பேணப்பட்டு வருகின்றன. சர்வதேச மனிதாபிமான சட்டத்தைக்கூட சரியான முறையில் விடுதலைப் புலிகள் அமைப்பு கடைப்பிடித்து வருகின்றது என்பதையும் நாங்கள் அவதானித்து வருகிறோம்.

புலிகளின் தலைவரின் கீழே உள்ள சகல போராளிகளும் மனித உரிமையை மதித்து நடந்துகொள்கின்றார்கள். உண்மையிலேயே இது பாராட்டுக்குரிய விடயமாகும்.


மக்கள் இடம்பெயர்ந்த காலங்களில் கூட மனித உரிமைகள் பேணப்பட்டு வந்ததையும் அவதானித்துள்ளோம்.

புதுக்குடியிருப்பில் உள்ள சர்வதேச செஞ்சிலுவைச்சங்க வதிவிடப்பிரதிநிதி கருத்துத் தெரிவிக்கையில் -

தேசியத் தலைவர் அறிக்கைகளின் பிரகாரம் சரியான முறையில் உண்மையிலே மனித உரிமைகள் பேணப்பட்டுவருகின்றன. குறிப்பாக காவல்துறையின் பொறுப்பில் இருக்கும் சீர்திருத்தப்பிரிவில் கைதிகளை நல்வழிப்படுத்துதலில், கைதிகளை நல்ல முறையில் மனிதாபிமான முறையில் மனித உரிமைகள் பேணப்பட்டு சரியான முறையில் நடத்தப்பட்டுவருகின்றன.

இதை நாங்கள் நேரில் பார்த்து ஒவ்வொரு கைதிகளையும் சந்தித்துக் கலந்துரையாடியபோது ஒவ்வொரு கைதியும் தாங்கள் நல்ல முறையில் பராமரித்து வருவதாகவும் அத்தோடு கைதிகள் சீர்திருத்தப் பிரிவினரை பாராட்டக்கூடிய வகையில் தங்கள் கருத்துக்களை முன்வைத்தனர் என்று தெரிவித்தனர்.

இதன்போது - சர்வதேச செஞ்சிலுவைச் சங்க ஏனைய பிரதிநிதிகளும் காவல்துறையின் சீர்திருத்தப் பிரிவைப் பாராட்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.



வன்னிப் பதிவுகள்

## காந்தி சேவா சங்க கூட்டம்

(பூநகரி)

பூநகரி காந்தி சேவா சங்க புனரமைப்பு கூட்டத்தை எதிர்வரும் 22 ஆம் திகதியன்று யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருவதனால் காந்தி சேவா சங்க பழைய உறுப்பினர்கள் மற்றும் ஆர்வலர்கள், காந்தி தொண்டர்கள் அனைவரையும் சோ.கந்தப்பிள்ளை, பிருந்தாவனம், சிவபுரம் என்ற முகவரியுடன் தொடர்புகொள்ளுமாறு காந்தி சேவா சங்க உறுப்பினர் லீலாவினோதன் அறிவித்துள்ளார்.

(29)

# முழங்காவில் இரணைமாதா நகர் மக்களுக்கு பெருந் தொண்டாற்றிய மருத்துவ முகாம்!

முழங்காவில் இரணைமாதா நகர் பகுதியில் சுகாதாரம் பேணும் செயற்பாடுகளைக் கொண்ட மருத்துவ முகாம் கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்துக்கான மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இந்த முகாமில் பல நூற்றுக்கணக்கான மக்கள் பல்வேறு நோய்களுக்கும் சிகிச்சை பெற்றதுடன், அம்மக்கள் எதிர்நோக்கும் சுகாதாரப் பிரச்சினைகள், அவற்றுக்கான காரணங்கள் குறித்த தகவல்களும் பெறப்பட்டன.

இந்த மருத்துவ முகாம் இரணைமாதா நகர் புனித மரியாள் தேவாலய வளாகத்தில் நடைபெற்றது. இங்கு நோய்களுக்கான சிகிச்சை, இரத்தப் பரிசோதனை, சிறுநீர் பரிசோதனை, எக்ஸ்ரே படப்பிடிப்பு, பற் சிகிச்சை, கண் பரிசோதனை, சிறுவர்களுக்கான நிறை, உயரம் அளவீடு, கர்ப்பவதிகளுக்கான பரிசோதனை என்பன நடத்தப்பட்டன.

இவற்றோடு சிறு குழந்தைகளுக்கான திரிபோஷா, சவர்க்காரம் விநியோகிக்கப்பட்டதுடன், சுகாதாரப் பழக்க வழக்கங்கள், உணவுப் பழக்கம் என்பன தொடர்பாக சுகாதார வகுப்புக்களும் இடம்பெற்றன.

மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் தலைமையில் 10 இற்கும் மேற்பட்ட வைத்தியர்கள், அம்டா நிறுவனத்தின் வைத்தியர்களும், எக்ஸ்றே தொழில்நுட்பவியலாளர்கள், பூநகரி சுகாதார வைத்திய அதிகாரி, சுகாதாரத் தொண்டர்கள், சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர்கள் ஆகியோரும் சேவையாற்றினர்.

தமது மருத்துவ மற்றும் சுகாதாரத் தேவைகளை தமது வாசற்படிக்கே வந்து நிறைவேற்றியமைக்காக - முழங்காவில் பங்குத்தந்தையாகிய எக்ஸ்.டபிள்யூ.ஜேம்ஸ்ஸும், இரணைமாதா நகர் மற்றும் அதன் அயற்பகுதி மக்களும் தங்கள் மனமார்ந்த நன்றியை மருத்துவமுகாம் குழுவினருக்குத் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# பூநகரியில் மருத்துவப் பரிசோதனை!

(பூநகரி)

இந்தியாவிலிருந்து நாடு திரும்பியவர்களுக்கான மருத்துவப் பரிசோதனை கடந்த 5 ஆம் திகதியன்று பூநகரி கட்டம் 1 வைத்தியசாலையில் நடைபெற்றது. இடம்பெயர்ந்து இந்தியாவில் தஞ்சமடைந்திருந்து அண்மையில் நாடு திரும்பிய பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மக்களுக்கே இப்பரிசோதனை நடத்தப்பட்டது.

பூநகரி பிரதேச செயலாளரின் வேண்டுதலுக்கமைய நடத்தப்பட்ட இந்தப் பரிசோதனையில் 42 பேர் பரிசோதிக்கப்பட்டனர். இவர்களுள் 13 ஆண்களும், 16 பெண்களும், 13 குழந்தைகள் மற்றும் சிறுவர்களும் அடங்குவர்.

# விடுதலைப் புலிகள் கொடுத்த அழுத்தத்தாலேயே வடக்கு-கிழக்கில் குளங்கள் புனரமைக்கப்படுகிறது

## நியாப் அறிமுக விழாவில் கரிகாலன்



(கிளிநொச்சி)

விடுதலைப் புலிகள் கொடுத்த அழுத்தத்தால்தான் வட - கிழக்கிலுள்ள குளங்களை நியாப் புனரமைத்து வருகிறது என தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சி.கரிகாலன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நியாப் அறிமுக விழாவில் பேசிய அவர்,

நியாப் 2 திட்டம் உலகவங்கியால அறிமுகப்படுத்தப்படுகின்றது. நியாப் திட்டத்தின்மூலம் குளங்களைப் புனரமைக்கும் பணிகளை கடந்த 3 ஆண்டுகளாக வட - கிழக்கு மாகாண பிரதேசங்களில் உலக வங்கி நடைமுறைப்படுத்தி வருகிறார்கள். ஆரம்பகாலத்தில் இந்தத் திட்டங்களை வட - கிழக்கு மாகாணத்தில் நடைமுறைப்படுத்த முடியாது. அதற்கு விடுதலை புலிகள் ஆதரவு தரமாட்டார்கள் என்ற கருத்தை அரசாங்கம் உலக வங்கிக்குக் கொடுத்திருந்தார்கள்.

உலக வங்கி அதிகாரிகள் புலிகளைச் சந்தித்து பேசியபோது - புலிகள் அவர்களுக்கு கொடுத்த உத்தரவாதத்தின் அடிப்படையில் தான் வட - கிழக்கு மாகாணங்களிலும் குளங்களைப் புனரமைக்கும் நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும் என்று கண்டிப்பான உத்தரவு மற்றும் அரசாங்கத்துக்குக் கொடுத்த அழுத்தத்தின் காரணமாகத் தான் வட - கிழக்கு மாகாணங்களில் நியாப் திட்டம் செயற்படுத்தப் படுகிற ஒரு நிலை உருவாகியது.

இற்றைக்கு 3 ஆண்டுகளாக நடைமுறைப்படுத்தி வந்த இந்த நியாப் திட்டத்தை ஒரு மீளாய்வு செய்வதன் அடிப்படையில் இந்த நியாப் 2 திட்டத்தை எவ்வாறு நடைமுறைப்படுத்தவேண்டும் என்ற பொதுவான சில ஒழுங்கு விதிகளை உலகவங்கி எடுத்திருக்கிறது.

குறிப்பாக இந்தத் திட்டத்தினுடைய அடிப்படை நோக்கம் விவசாயிகளை ஒரு பலமுள்ளவர்களாக மாற்றி அமைப்பதுதான் அடிப்படையான நோக்கம். விவசாயிகளுக்கு தேவையான குளங்களைப் புனரமைப்புச் செய்து அவர்களுக்கு ஒரு ஜீவனோபாய திட்டத்திற்கான நிதியையும், வழங்கி அந்த நிதிமூலம் அவர்கள் செய்கின்ற தொழிலை மேம்படுத்தி தங்கள் சொந்தக்காலில் நிற்கின்ற ஒரு சூழலை உருவாக்க வேண்டும் என்றொரு நோக்கத்திற்காகவே இந்த நியாப் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

ஆனால் இது கடந்தகால செயற்பாடுகளால் எதிர்பார்த்த வெற்றியை தராத வகையிலே ஒரு புதிய முறையை விவசாயிகளைப் பலப்படுத்துகின்ற ஒரு நடவடிக்கையை இந்த இரண்டாவது நியாப் திட்டத்தில் நடைமுறைப்படுத்துவற்கான ஆலோசனையை வழங்கியிருக்கிறார்கள்.

அதே ஒரு நாட்டினுடைய மிகப் பெரிய சக்தியாக விவசாயிகள்தான் திகழ்ந்துகொண்டிருக்கிறார்கள். விவசாயிகள் அந்த நீரைச் சரியான முறையில் பயன்படுத்தி வெற்றி பெறவேண்டும் என்பதற்காக அவர்களுக்கான ஒரு வலுவூட்டல் நிகழ்வும் அவர்களைப் பலப்படுத்துகின்ற ஒரு நிகழ்வும் இந்த நியாப் 2 திட்டத்தில் ஆலோசனையாக வழங்கப்பட்டு இருக்கின்றது.

குறிப்பாக இந்த நீரைப் பயன்படுத்துவதில் விவசாயிகள் அக்கறையோடு இருக்கவேண்டும் என்ற ஒரு கருத்து நாங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியதாகவும், அதை கண்டிப்பாக நடைமுறைப்படுத்த வேண்டியவர்களாகவும் நாங்கள் இருக்கின்றோம்.

இப்பொழுது ஏற்பட்டிருக்கின்ற இந்த வரட்சியின் மூலம் எல்லா இடங்களிலும் குடிநீருக்குக்கூடத் தட்டுப்பாடான ஒரு நிலை உருவாகியிருக்கிறது. நாங்கள் குளங்களைப் புனரமைப்பது நீரை தேக்கி வைப்பதற்காக. அந்த நீரைச் சரியான முறையில் முகாமைத்துவம் செய்து பயன்படுத்தவேண்டிய பொறுப்பு ஒவ்வொரு விவசாயிக்கும் இருக்கின்றது.

ஒவ்வொருவரும் அந்தக் குளத்தில் நின்று வேலை செய்வதன் மூலம்தான் இது எங்களுடைய குளம், எங்களுடைய நீர், இதை நாங்கள் பயன்படுத்துவது - இதில் கவனமாக இருக்கவேண்டும். இதைப் பராமரிப்பதில் கவனமாக இருக்க வேண்டும் என்றொரு நோக்கத்திற்காகவே அத்தகையதொரு சட்டத்தையும் ஒரு நிகழ்ச்சியையும் அதில் சேர்த்திருக்கிறார்கள்.

அதே அந்த வெள்ளைக்காரர்கள் வந்து எதிர்பார்க்கின்ற நிகழ்வுகளை நாங்கள் செயற்படுத்துவதில்லை. யாருமே அதை ஒரு பொருட்டாக மதிப்பதுமில்லை. அவர்களுக்குப் பணம் கிடைக்கும் என்றொரு நோக்கத்தோடு நாங்கள் குளம் கட்டினாலும் சரி, கட்டாவிட்டாலும் சரி இது எங்களுடைய குளம். கிராமத்துக்குக் குளம் வேண்டும் என்பதிலேயே நாங்கள் அக்கறையாக இருப்போம். அதனைக் கட்டி முடிப்பதிலேயே அதை அக்கறையோடு பராமரிப்பதிலும் எடுக்கின்ற முயற்சி மிகவும் குறைவாகவே இருக்கின்றது என அவர் மேலும் தெரிவித்தார்.



வட்டக்கச்சியில் இருந்து கிளிநொச்சி செல்லும் பாதையில் கோவிந்தன் கடைச்சந்திக்கும் மூன்றாம் வாய்க்கால் சந்திக்கும் இடையில் இச்சிறிய நீர்ப்பாசன கால்வாய்க்கு அமைக்கப்பட்ட மதகு வீதியின் ஓரமாக முடிவடைவதால் இரவு நேரங்களில் பயணம் செய்யும் மக்கள் இதனுள் விழும் அபாயம் தோன்றியுள்ளது.

# கண்டாவளைப்பகுதி கற்றாக் நோயாளர்களுக்கு 18 ஆம் திகதி புதுக்குடியிருப்பில் சத்திரசிகிச்சை!

## கிளிநொச்சி பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தகவல்

(கிளிநொச்சி)

கடந்த 31 ஆம் திகதியன்று தர்மபுரம் வைத்தியசாலையில் நடைபெற்ற கண்டாவளை பிரதேச மக்களுக்கான கண் பரிசோதனை முகாமின்போது, பரிசோதனைக்குட்படுத்தப்பட்டு கற்றாக் சத்திரசிகிச்சைக்காகப் பரிந்துரைக்கப்பட்டவர்களுக்கான சத்திரசிகிச்சை எதிர்வரும் 18 ஆம் திகதி புதுக்குடியிருப்பு பொன்னம்பலம் வைத்தியசாலையில் நடத்தப்படவுள்ளது.

கண்டாவளைப் பிரதேச செயலாளரின் வேண்டுதலுக்கு அமைய நடத்தப்பட்ட இந்தக் கண் பரிசோதனை முகாமில் 102 பேர் பரிசோதிக்கப்பட்டனர்.

இவர்களில் 30 பேருக்கு கற்றாக் சத்திரசிகிச்சையும், 8 பேருக்கு மருத்துவ சிகிச்சையும், ஏனையோருக்கு கண்ணாடியும் வழங்கப்பட வேண்டியிருந்தமை கண்டறியப்பட்டது. இந்தப் பரிசோதனையை வைத்திய கலாநிதி க.எழுமதி நடத்தியிருந்தார்.

இங்கு கற்றாக் சத்திரசிகிச்சைக்குப் பரிந்துரைக்கப்பட்ட 30 பேருக்கே 18 ஆம் திகதி சத்திரசிகிச்சை வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கண்ணாடி வழங்குவதற்கான பரிந்துரை கண்டாவளை பிரதேச செயலருக்கு வழங்கப்பட்டுள்ளது.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.

சிந்தனைக்கு

நிலத்தில் கிடந்தமை கால்காட்டும் காட்டும்
குலத்தில் பிறந்தார்வாய்ச் சொல்

திருக்குறள்

# நமது நோக்கு

## ஜே.வி.பி. அடங்குமா ? அடக்கப்படுமா?

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசினுள் உட்கட்சி முரண்பாடுகள் அதிகரித்து வருவது ஒருபுறமிருக்க, கட்சியின் தலைமைப்பதவியில் இருந்து ஜனாதிபதி விலகியதைத் தொடர்ந்து ஏற்பட்ட அப்பதவிக் கதிரையை கைப்பற்றுவதற்கான போட்டியும், அதற்கு ரத்னசிறிவிக்ரமநாயக்க ஜனாதிபதியால் தேர்ந்தெடுக்கப்பட்ட விதமும், கட்சியின் சிரேஷ்ட தலைவர்களிடையே சில கருத்தியல் மோதல்களை ஏற்படுத்தியுள்ளதுடன், அரசின் எதிர்கால ஸ்திரத்தன்மை குறித்தும் ஏற்கனவேயுள்ள சந்தேகங்களை மேலும் வலுப்படுத்தியுமுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைமைப் பதவியை நோக்கி தமது பார்வையை பதித்திருந்த பிரதமர் ராஜபக்ஷ, அமைச்சர் அநுராபண்டாரநாயக்க போன்றோர், அது தம்வசம் கிடைக்காததில் ஏமாற்றம் அடைந்துள்ளதுடன் அது குறித்த தமது அதிருப்தியை வெளிப்டையாகத் தெரிவிக்கவும் செய்துள்ளனர்.

ராஜபக்ஷ பிரதமராக முக்கிய பதவியை வகிப்பதால், ஆளும் கட்சியின் தலைமைப் பொறுப்பும் தன்வசமே வரும் என எதிர்பார்த்திருந்தார். அதேவேளை, பிரதமர் பதவிக்கு காத்திருந்த அநுரபண்டாரநாயக்க, அது கைநழுவிப்போனதும் வேறு சில முக்கிய அமைச்சுக்களில் ஏதாவது ஒன்று தனக்குக் கிடைக்கும் என்ற நப்பாசையுடன் காத்திருந்தார். ஆனால், அவருக்குக் கிடைத்தது உல்லாசப் பயணத்துறை மட்டுமே.

அநுராவால் கூட்டணிக்குக் கொண்டுவரப்பட்ட ஜே.வி.பி. முக்கியஸ்தர்கள் பலரும் முக்கியமான அமைச்சுக்களை தம் வசமாக்கிக்கொண்டுள்ள நிலையில், அவர் மட்டும் அதிக விலாசமற்ற அமைச்சராக்கப்பட்டு ஓரங்கட்டப்பட்டமைக்கான காரணம் அவர் மீதான நம்பகத்தன்மை சந்திரிகாவிற்கு மிகமிக குறைவு என்பதேயாகும்.

கட்சியின் தலைமைப் பதவி தனக்குக் கிடைத்தால் அது தன்னைப் பெருமளவில் விலாசப்படுத்தி விடும், என அநுரா கண்ட கனவை சந்திரிகா நனவாக்க உதவவில்லை. மாறாக பிரதிப்பாதுகாப்பு அமைச்சரான ரத்னசிறிவிக்கிரமநாயக்கவை அப்பதவிக்கு நியமித்ததன் மூலம், கட்சியில் தனது நம்பிக்கைக்குரிய நபர் ரத்னசிறிதான் என்பதை வெளிப்படுத்தி விட்டார் என்றே கூறவேண்டும்.

இது அநுராவுக்கு ஒரு கௌரவப்பிரச்சினையாகவே மாறிவிட்டதெனலாம். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உருவாவதற்கு, ஜே.வி.பியுடன் இணைப்பை ஏற்படுத்தும் முயற்சியில் பல்வேறு எதிர்ப்புகளுக்கிடையே கடுமையாக உழைத்தவர்கள் அநுராவும், மங்களசமரவீரவுமே ஆவர். அந்த வகையில் இந்த முன்னணி தேர்தலில் வெற்றி பெற அநுரா ஒரு முக்கிய காரணியாக விளங்கினார்.

ஆரம்பம் முதலே ஜே.வி.பியுடனான உறவுகளை முற்றாக எதிர்த்தவர் ரத்னசிறி விக்கிரமநாயக்க. அவரை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவர் ஆக்கியதன் மூலம், ஜே.வி.பியினரின் மிரட்டலுக்கு இலகுவில் பணியாத நபரை கட்சியின் உச்சத்தில் இருத்திய திருப்தி ஜனாதிபதிக்கு இருக்கும் என்பதில் ஐயமில்லை.

இதனை விடவும் தான் விரும்பிய வேளையில், அந்தப் பதவியை மீளப்பெறவேண்டிய அவசியம் நேரும்போது தனக்காக அவர் அந்தப் பதவியிலிருந்து விலகி இடம்கொடுப்பார் என்ற நம்பிக்கையும் அவருக்குண்டு.

பிரதிப்பாதுகாப்பு அமைச்சுப் பதவியும், கட்சியின் தலைமைப் பதவியும் தனது நம்பிக்கைக்குரியவரிடம் இருக்க வேண்டுமென்பதில் ஜனாதிபதி சந்திரிகா மிகவும் கவனமாகவே செயற்பட்டுள்ளார். இந்த நியமனம் ஜே.வி.பிக்கு சாதகமானதாக இருக்கப்போவதில்லை என்பதே முக்கிய விடயமாகும்.

கடந்த சில வாரங்களாக ஜே.வி.பியினரின் அச்சுறுத்தல், மிரட்டல்களுக்கு ஜனாதிபதி வளைந்து கொடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டமையானது ஜே.வி.பியின் பலத்தை அதிகரித்ததுடன், கட்சிக்குள் அவர்களின் ஆதிக்க ஆளுமையை விஸ்தரிக்கவும் வாய்ப்பினை வழங்கியது.

சமாதான முயற்சிகளை விரும்பியோ விரும்பாமலோ முன்னெடுக்கவேண்டிய நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ள ஜனாதிபதிக்கு, ஜே.வி.பினரின் ஒத்துழைப்பு கிடைக்காத நிலையே தொடர்வதுடன், அதனை வைத்தே கட்சித்தலைவி என்ற வகையில் அவருக்குத் தொடர்ந்தும் நெருக்குதல்கள்- அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டு வருவதானது, அவருக்கு தலைவலியையும் அமைதியின்மையையும் ஏற்படுத்தும் விடயமானதாலேயே அவர் அந்தப் பதவியை விட்டு விலகிக்கொண்டார் என்பதே உண்மையாகும்.

ஜனாதிபதியால் ஜே.வி.பினரின் அத்துமீறல் செயற்பாடுகளை கட்சித்தலைவி என்ற வகையில் சகித்துக் கொள்ளவே முடியவில்லை.


ஆகவே, வெறும் ஜனாதிபதியாகவே இருக்க முடிவு செய்துவிட்டார். அநுராவை தலைமைப் பதவியில் அமர்த்தினால்- அது சோமவன்ச அமரசிங்கவை அல்லது விமல் வீரவன்சவை அல்லது ரில்வின் சில்வாவை நியமித்ததற்கு சமனாகிவிடும் என்பது ஜனாதிபதிக்குத் தெரியும்.

ஆனால், அநுரா இதனை விட்டுவிடத்தயாராக இல்லை. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைமைப்பதவிக்கு வேளைவரும் போது மீண்டும் முயற்சிப்பேன் என அறைகூவல் விடுத்துள்ளார். மிகப்பெரும் பௌத்த சிங்கள இனவாதியான ரத்னசிறி இப்போது ஹெல உறுமயவுடன் புரிந்துணர்வு உடன்பாடொன்றை எட்ட முயற்சிப்பதாகவும் செய்தி வந்துள்ளது.

இது உண்மையானால் இதுவும் ஜே.வி.பிக்கு எதிரான செயற்பாடேயாகும். ஆக ஜே.வி.பியினரை ஒடுக்க அல்லது கட்டுப்படுத்தும் நகர்வுகளின் அவசியத்தை ஜனாதிபதி உணர்ந்திருப்பதுபோல் தெரிகிறது.

ஜே.வி.பி அடங்குமா? ஆட்சியை ஆட்டம் காணவைககுமா? அடுத்துவரும் வாரங்களில் தெரியும்.

## நாடும் நடப்பும்




# ஐக்கிய நாடுகள் சபையில் அல்ல
# திருமலை மணிக்கூட்டுக் கோபுரத்தின் உச்சியில்
# தமிழீழத் தேசியக் கொடியை ஏற்றிப்பார்க்கட்டும்

## வடக்கு - கிழக்கு சிங்கள அமைப்பு அறைகூவல்

அடுத்து நடைபெறவுள்ளது - ஈழயுத்தமல்ல, சிங்கள மக்களின் விடுதலைப் போராட்டம் என்றும், அதற்குத் தலைமை தாங்குவதற்கு எந்தவிதத்திலேனும் நாங்கள் பின்வாங்கப் போவதில்லை. தமிழ் இனவாதத்தைப் பரப்புவர்களுக்கு இதைத் தெளிவுபடுத்தவுள்ளதாகவும் வடக்கு - கிழக்கு சிங்கள அமைப்பு அறிக்கை விடுத்துள்ளது.

அந்த அமைப்பின் இணைப்புச் செயலாளர் சுனில் அளுத்கமகேயின் கையொப்பத்துடன் கூடிய அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

கடந்த ஆட்சிக் காலத்தைப்போன்றே இந்த அரசின் காலத்திலும் நடைபெறுகின்றது. இராணுவ உளவுப் பிரிவு உறுப்பினர்கள், புலிகளின் இலக்குகளுக்கு உட்பட்டுக் கொலை செய்யப்படுவதும், வடக்கு - கிழக்குப் பிரதேசத்தில் இராணுவ முகாம்களைச் சுற்றிப் புலிகள் - முகாம் மற்றும் காவலரண்களை அமைக்கின்றனர்.

இதனால், சிங்களக் குடும்பங்கள் பாதுகாப்புத் தேடி வெளியேறுகின்றனர். இவ்வாறு இவர்கள் வெளியேறுவதால், அங்கு தமிழ் குடும்பங்கள் குடியமர்த்தப்படுகின்றனர்.

இதற்கு நல்லதோர் உதாரணமாக - திருகோணமலை கடற்படை முகாமைச் சுற்றியும், யாழ் இராணுவத்தினரின் முன்னரங்கக் காவலரண்களுக்கு முன்பாகவும் புலிகளின் காவலரண்கள் அமைக்கப்படுவதையும் குறிப்பிடலாம்.

கடந்த இரண்டாம் திகதியன்று திருகோணமலை விலன்குளம் விகாரைக்கு வந்த ஆயுதம் தாங்கிய விடுதலைப் புலிகள், விகாராதிபதியான தேரருக்கு, மரண அச்சுறுத்தல் விடுத்துள்ளனர். அத்துடன், கிழக்குப் பிரதேசங்களில் விகாரைகளுக்குக் குண்டுத் தாக்குதல் நடத்தியதையும் குறிப்பிடலாம்.

இதனூடாக எமக்கு விளங்குவது என்னவெனில், பொதுஜன ஐக்கிய மக்கள் முன்னணி அரசு மற்றும் ஜே.வி.பியினர் இணைந்து உருவாக்கிய சுதந்திர முன்னணி அரசும், ஐக்கிய தேசியக் கட்சியும், ஹெல உறுமய உட்பட அனைத்து அரசியல் கட்சிகளும் தங்களது அதிகாரங்களைப் பாதுகாப்பதன் பொருட்டுச் செய்ய வேண்டியவைகளைச் செய்யாது, புலிகளின் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களினதும், கருணாவினுடைய விவகாரங்களையும் சுற்றியே அரசியல் சூதாட்டங்களை நடத்திவருகின்றனர்.

அது எங்கள் தாய் மண்ணையும், எமது இனத்தையும் அழிப்பதற்கான நடவடிக்கையாகும். எனவே, தெற்கிலுள்ள அனைத்து அரசியல் கட்சிகளையும், அரசியல்வாதிகளையும் நாம் கேட்டுக்கொள்வது என்னவெனில் அரசியல் சூதாட்டங்களை, நிறுத்திவிட்டு இப்பொழுதாவது நாட்டினதும், இனத்தினதும் எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திக்குமாறு கோருகிறோம்.

கடந்த 20 வருட காலமாகத் தமிழ் இனவாதத்துக்கும், தெற்கிலுள்ள சிங்களத் தேசத் துரோகிகளுக்கும் எதிராக வாழ்க்கையை அர்ப்பணிக்கும் போராட்டத்தை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதை, நிறுத்தமுடியாது போய்விடுமென அரசு உட்பட தெற்கின் அரசியல்வாதிகள் அனைவருக்கும் தெளிவுபடுத்துகிறோம் என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்க் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் - இடைக்கால நிர்வாகத்தை வழங்காது விட்டால், ஐக்கிய நாடுகள் அமைப்பில் புலிக்கொடியை ஏற்றுவதை நிறுத்த முடியாதுபோகுமென நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போது தெரிவித்தார்.

சிவாஜிலிங்கத்துக்கு நாம் தெரியப்படுத்துவது என்னவெனில் - ஐக்கிய நாடுகள் சபையில் அல்ல, முடிந்தால் திருகோணமலை நகரிலுள்ள மணிக்கூட்டுக் கோபுரத்தின் உச்சியில் தமிழ்க் கொடியைப் பகிரங்கமாக ஏற்றிப்பார்க்கட்டுமெனக் கூறவிரும்புகிறோம். (தே)

## ஜே.வி.பி-நிதியமைச்சர் இன்று சந்திப்பு

(கொழும்பு)

வாழ்க்கைச் செலவு உயர்வைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக ஜே.வி.பிக்கும், நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகமவுக்கும் இடையிலான கலந்துரையாடலொன்று இன்று நடைபெறவுள்ளது.

ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் ரில்வின் சில்வா தலைமையிலான பிரதிநிதிகள் குழுவொன்று இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றவுள்ளது.

வாழ்க்கைச் செலவு உயர்வைக் கட்டுப்படுத்துவது தொடர்பான நிலைகளைக் கண்டறிவதற்காக ஜே.வி.பியினால் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை - நிதியமைச்சரிடம் இன்று சமர்ப்பிக்கப்படவுள்ளது.

# பேச்சுக்கு ஜே.வி.பி எதிர்ப்பது சமாதானத்தை சீர்குலைக்கும் சதி!

## ஜோசப் எம்.பி: தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக்கால தன்னாட்சி அதிகார வரைபை அடிப்படையாக வைத்து, அரசு புலிகளோடு பேசுவதை ஜே.வி.பி. எதிர்ப்பது திட்டமிட்ட சமாதான முயற்சிகளைச் சீர்குலைக்கும் செயலாகுமென, தமிழர் விடுதலைக் கூட்டமைப்பின் சிரேஷ்ட உபதலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் கட்சி அங்கத்தவர்கள் அவரைச் சந்தித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஜே.வி.பி ஒரு பொதுவுடமைக் கொள்கையுடைய இடதுசாரிக் கட்சிக்கும், முதலாளி வர்க்கத்தினரால் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களுக்காகக் குரல் கொடுக்கும் ஒரு கட்சியாகும்.


அதாவது - கடந்தகால ஆயுதப்போராட்டம் நலிந்து போன அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்ட சமூகத்துக்குக் குரல் கொடுக்கும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்டது.

அப்படியாக அடக்குமுறைக்கு எதிராகப் போர்க்கொடி எழுப்பிய ஜே.வி.பி, அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்ட ஒரு இனத்தின் விரோதத்தனத்துக்காக ஐக்கிய இலங்கைக்குள் தீர்வுகாணும் நோக்குடன் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி நிர்வாக அதிகாரசபை வரைபை வைத்துப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதை எதிர்ப்பது மிகவும் வேடிக்கையாகவுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

அறிவியல்....

# கையடக்கத் தொலைபேசிக்கும் வைரஸ் வருகிறது

- தமிழ்மொழியாக்கம் வல்லையூரான்



உண்மையாகச் சொல்லப் போனால் அஞ்சல் திணைக்களத்தில் எழுதுவினைஞனாகச் சேர்ந்து கொண்ட பின்புதான் நான் தொலைபேசியின் ரீசிவரைக் கையால் தொட்டிருக்கின்றேன். இப்பொழுது சின்னஞ்சிறுசுகளும் கையடக்கத் தொலைபேசிகளைக்கூட மிக இலாவகமாகக் கையாளுகின்றன. இப்பொழுது தமிழ் நாட்டில் உள்ள எனது பேத்திகூட, 2 வயதுதான் அவளுக்கு தொலைபேசியில் "தாத்தா" என என்னை அழைக்கின்றாள். காலம் எந்த அளவுக்கு வளர்ந்து விட்டிருக்கிறது. இங்கு கொழும்பில் நடமாடுகின்ற இளைஞர், யுவதிகள் யாரைப் பார்த்தாலும் அவர்களது கரங்களில் ஒரு நடமாடும் தொலைபேசி கட்டாயம் இருக்கும். இந்த நடமாடும் தொலைபேசியினால் பல விபத்துக்கள் கூட நேர்ந்திருக்கின்றன. சமீபத்தில்கூட எனது மகள் வந்து கூறினாள். வெள்ளவத்தைக் கடற்கரையோரம் கையடக்கத் தொலைபேசியில் யாருடனோ சிரித்துக் கதைத்துக் கொண்டே தண்டவாளத்தைக் கடந்த ஒருவன் புகையிரதத்தில் மோதுண்டு சதைப் பிண்டமாகச் சிதைந்து போனானாம்.

நடமாடும் தொலைபேசி அல்லது கையடக்கத் தொலைபேசி என அழைக்கப்படும், இந்தத் தொலைபேசி என்பது வேகமாக மாற்றமடையக் கூடிய ஒரு உபகரணம். இன்று நங்கள் காண்கின்ற நடமாடும் தொலைபேசி நாளை பெறுமதி எதுவும் இல்லாத காலம் கடந்த ஒன்றாகிப் போய் விடும். இப்போது நாளுக்கு நாள் புதிது புதிதாக விதம் விதமாக கையடக்கத் தொலைபேசிகள் வந்த வண்ணம் இருக்கின்றன. புகைப்படம் எடுக்கும் தொலைபேசி, வீடியோ படம் எடுக்கும் தொலைபேசி, தற்பொழுது தொலைக்காட்சி பார்த்து ரசிக்கும் தொலைபேசி கூட வந்து சேர்ந்து விட்டது.

மொத்தத்தில் சொல்லப்போனால் இன்று எங்கள் வாழ்க்கையில் மிகவும் நெருங்கிய ஒரு நண்பனைப் போன்று அது வந்து சேர்ந்து விட்டது. பார்க்கின்ற எல்லோர் கைகளிலும் நடமாடும் தொலைபேசி இருப்பதனால் நொடிப் பொழுதிலேயே தத்தம் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளமுடிகின்றது.

சமீபத்தில் நாடாளுமன்றத்தில் அடிதடி, குழப்பங்கள் நிகழ்ந்த பொழுது மக்கள் விடுதலை முன்னணியின் பிரசாரச் செயலாளர் கையடக்கத தொலைபேசி மூலம்தான் படங்களைப் பிடித்துக் கொண்டிருந்தார்.

இந்தக் காரணங்களினால் இந்தத் தொலைபேசி பற்றி நாங்கள் கதைக்காமல் இருக்க முடியாது. ஆகவே நடமாடும் தொலைபேசி பற்றி எங்கள் செவிகளில் விழுந்த - நாம் கேள்விப்பட்ட செய்திகள் பற்றிச் சிறிது பார்ப்போமா?

இந்த நடமாடும் தொலைபேசி பற்றி சமீபத்தில் செய்த ஆய்வின்படி கருத்துக்கள் பல வெளியாகியுள்ளன. பெண்கள் மற்றும் ஆண்களின் கையடக்கத் தொலை பேசி பாவிக்கின்ற தேவைகள் ஒருவருக்கு ஒருவர் மாறுபடும் என்பது. அவற்றில் ஒன்று இதுவரையில் இந்தத் தொலைபேசியைப் பாவிக்கும் ஆண்களில் அதிகம் பேர் மிகுந்த விருப்பத்தினைக் காண்பிபது தொலைபேசியின் ஊடாக விளையாட்டுக்களை விளையாடுவதற்கும், அது போன்ற விளையாட்டுக்களை ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொள்வதிலுமே, பெண்களில் அதிகமானோர் விருப்பத்தைக் காண்பிப்பது தொலைபேசியில் புதிய சமிக்ஞை ஒலிகளை வைத்திருப்பதற்கே இந்த ஆய்வுகளில் இருந்து வெளியாகியுள்ள இன்னொரு விடயம். மூன்றாவது பரம்பரையைச் சேர்ந்தவர்கள் வீடியோ, தொலைபேசிப் பாவனை முறையினை வேகத்தோடு ஆரம்பித்துள்ளார்கள் என்பதாகும்.

பெண்களில் அதிகமானோர் புதிய பாடல்களின் இசைகளை தங்கள் சமிக்ஞைகளின் பொருட்டு அமைத்துக் கொள்வதற்கு விருப்பத்தினைக் காண்பிப்பதும் இன்று இரவு வெளியாகும் பாடலின் ஒலியினை நாளைய நாளுக்குள் தொலைபேசியில் அமைத்துக் கொள்வதற்கு அவர்கள் மிகுந்த முயற்சி எடுப்பதாகவும் வெளியாகியுள்ளது.

இவை அனைத்தினதும் ஊடாக வெளியாவது அதிகம் பேர் தொலைபேசியோடு அதிக நேரத்தைச் செலவிடுகின்றார்கள் என்பது, அது தொலைபேசி வசதிகளை வழங்கும் கம்பனிகளுக்கு நல்ல தகவல் என்பதில் சந்தேகமில்லை. இது உண்மையென ஏற்றுக்கொள்ள வேண்டி இருப்பது ஐரோப்பாவில் செய்யப்பட்ட ஆய்வின் போது வெளியாகியுள்ள காரணங்களாலேயே ஆகும். ஐரோப்பாவில் நடமாடும் தொலைபேசியைப் பாவிப்பவர்கள் இதுவரை தங்கள் மின்சாரக் கட்டணம், GAS கட்டணம் இவற்றைவிட அதிகமாக நடமாடும் தொலைபேசிக் கட்டணமாகச் செலுத்துகின்றார்கள் என்பதாகும்.

தங்களது அன்றாடத் தேவைகளுக்கும் அதிகமாக பணத்தினைச் செலவு செய்வது ஐரோப்பாவில் பொருளாதார நிபுணர்களை ஆச்சரியத்துக்குள்ளாக்கும் நிகழ்வாக மாறியுள்ளது.

தற்பொழுது செய்யப்பட்டுள்ள ஆய்வுகளின்படி 18 வீதமானோர் கமெராவோடு கூடிய தொலைபேசியைப் பெற்றுக் கொள்வதற்கும், 23 வீதமானோர் வீடியோ கமெரா வோடு கூடிய தொலைபேசியைப் பெற்றுக்கொள்வதற்கும் விருப்பத்தோடு இருக்கின்றார்கள். 17 வீதமானோர் நடமாடும் தொலைபேசியில் அதிகமாகச் செய்வது சைகை ஒலி பரிமாற்றத்தினையே,

நடமாடும் தொலைபேசி வெளிக்களத்தில் புதிய வருகை கமெராத் தொலைபேசியே. ஐரோப்பாவில் கமெரா தொலைபேசியைப் பாவிப்பவர்கள் மாதத்தில் குறைந்தளவு தொலைபேசியைப் பாவித்தாலும் குறைந்தது 20 புகைப்படங்களையாவது பிடித்துக் கொள்கின்றார்கள் என்பது வெளியாகியுள்ளது. உலகம் பூராவும் கமெரா தொலைபேசி விற்பனை இதுவரையில் 84 மில்லியனைத் தாண்டிவிட்டதாகக் கூறப்படுகின்றது.

நங்கையரைத்தேடி இம்முறை நல்லூரான் வீதியிலே கமெராத் தொலைபேசிகள் மிக அதிகளவில் நடமாடக்கூடும் என்ற தகவலையும் முன்கூட்டியே தெரிவித்துக் கொள்கின்றேன்.

எப்படியாயினும் இந்தக் கமெராத தொலைபேசி அதிக வேளைகளில் சமூகத்துக்கு கரைச்சல்களைக் கொடுக்கின்றது. இலங்கை போன்ற நாடுகளில் நாடாளுமன்றத்தில் அல்லோல கல்லோலங்களை கமெரா தொலைபேசி மூலம் படங்களைப் பிடித்துக் கொள்ளும் வேளையில் வெளிநாடுகளில் பள்ளிகள், கௌரவமான இடங்கள், அரைநிர்வாண நடிகைகள் இருக்கின்ற இடங்களுக்கு கமெராத் தொலைபேசிகளைக் கொண்டு செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. அதிக கமெராத் தொலைபேசிகளில் வீடியோ வசதியும் உள்ளமையால் பள்ளிகளில் பிள்ளைகள் தங்களது தொலை பேசிகளின் பக்கம் பார்த்த வண்ணம் பலவிதமான தகவல்களை பரிமாறிக் கொள்வதாகவும். இதனால் பாடசாலை நடவடிக்கைகளுக்கு பெரிய தீங்குகள் நிகழ்வதாகவும் அறிந்து கொள்ள முடிகிறது. இதனால் ஐரோப்பாவில் அதிக பாடசாலைகளில் தொலைபேசிப் பாவனை தடை செய்யப்பட்டுள்ளது. அப்படி இந்த தொலைபேசிகள் இரகசியமாகப் பொருத்தி வைக்கப்பட்டு (களிப்பறைகள், படிக்கட்டுக்களின் கீழ்) பள்ளி மாணவிகளின் அவயவங்கள் தெரிகின்ற விதமாக படங்கள் பிடிக்கப்பட்டு அவை விநியோகிக்கப்படும் வியாபாரம் பரவுவதன் காரணமாக அமெரிக்காவில் அதிகமான பள்ளிகளில் கமெராத் தொலைபேசிகள் தடை செய்யப்பட்டுள்ளன. இணையப் பாவனைக்கு வந்ததோடு பல விதமான முறையற்ற நடத்தைகளின் பொருட்டு அது பயன்படுத்தப்பட்டதைப் போன்று தற்பொழுது கமெராத் தொலைபேசிகளும் அதன் பொருட்டு பயன்படுத்தப்படுகின்றன.



தசைகளைப் பிடித்துவிடும் நிலயங்களில் (மசாஜ்கிளீனிக்) நிகழ்பவற்றை படம் எடுத்துக் கொள்ளுதல், இரகசியமாக நடைபெறும் நிர்வாண நடனங்கள், மற்றும் உடலுறவு தொடர்பானவைகள் கூட படம் பிடித்தல், மற்றும் வீடியோ படம் பிடித்தல் நிகழ்வதனால் இப்படியான நிலையங்களுக்கு வருகை தரும் வாடிக்கையாளர்களை கமெராவோடு கூடிய தொலைபேசிகளைக் கொண்டு வருவதற்குத் தடை விதித்துள்ளார்கள்.

இது நாள்வரை மிகவும் இலகுவாக தகவல் பரிமாற்றங்களுக்குப் பயன்படுத்தப்பட்ட கையடக்கத் தொலைபேசிகளுக்கும் தற்பொழுது 'வைரஸ்' உட்புகத் தொடங்கியுள்ளது. 'கபீர்' என்ற பெயரில் அறிமுகமாகின்ற இந்த வைரஸ் தொலைபேசியினுள்ளே உட்புகும் போது "CARIBE" என்ற சொல் தொலைபேசியின் திரைமீது விழுகிறது. இந்த வைரசின் விஷேசம் என்னவென்றால் அதன் பிரதிகள் வேறு தொலைபேசிகளுக்கும் வைரஸ் பரவிச் செல்கின்றன. எப்படியாயினும் தொலைபேசிக்கு பரந்த தீங்கினைச் செய்வதற்கு இந்த வைரசுக்கு முடியாது. ஆனால், இது கணினி வைரஸைப் போன்று கையடக்கத் தொலைபேசிகளை அழிப்பதற்கும் நல்ல ஆரம்பென வைரஸ் விற்பன்னர்கள் கூறுகின்றார்கள். இதனால் எதிர்காலத்தில் கொடிய வைரஸ் வரக்கூடும் என்ற அச்சமும் பரவத் தொடங்கியுள்ளது.

இதுவரையில் அதிகமானோருக்கு நடமாடும் தொலைபேசி இல்லாமல் முடியாது என்ற நிலவரம் ஏற்பட்டுள்ளது. ஐரோப்பாவில் மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆய்வின்போது 26 வீதமானோர்களுக்கு நடமாடும் தொலைபேசி இன்றி வாழ முடியாது என்ற நிலவரம் ஏற்பட்டுள்ளதாக, தகவல் வெளியாகியுள்ளது. இது ஒரு பயங்கரமான நிலவரமாகும். இதன்மூலம் நிகழப்போவது என்ன? அதிகம் முன்னேறியுள்ள வைரஸ் ஆல் உங்கள் நடமாடும் தொலைபேசி அழியுமானால் முன்பு சொல்லப்பட்டவர்கள் போன்றவர்களுக்கு தங்கள் உயிர்களையே அழிக்க வேண்டியும் நேரிடலாம். ❄❄❄

நன்றி: 'லங்காதீப'

## மக்கள் குரலும், குமுறலும்...

வாசகர்களுக்கு,

(08-08-2004) அன்று திருக்குடும்பக் கன்னியர்மடம் பாடசாலையில் மாவட்ட மட்ட போட்டிகளான, இசைநாடகம், சிந்து நடைக் கூத்து என்பன இடம்பெற்றன. இந்த போட்டிகளில் சிந்து நடைக் கூத்தில் 5 பாடசாலைகள் பங்கேற்றிருந்தன.

இந்தச் சிந்து நடைக் கூத்தின் ஒரு அம்சமே காத்தவராயன் சிந்து நடைக்கூத்து ஆகும். இந்தக்கூத்தின் சாராம்சம் ஆக முத்து மாரி அம்மனுக்கு, கிருஷ்ணரும், ஆதிசிவனுமாக கல்யாணம் இல்லை என்றும், குழந்தை வரம் இல்லை என்றும் கொடிய சாபங்களை இட்டனர்.

இதனைக் கேட்டுவிட்ட நாரதர் ஓடோடிச் சென்று முத்துமாரிக்கு சாபத்தின் வகைகளையும் இதற்கான சாப விமோசனத்தையும் கூறவே மாரியானவள் தனக்கு மைந்தன் வரம் ஒன்றை ஆதிசிவனை மயக்கிப் பெறுகின்றார். இதுவே காத்தவராயனின் பிறப்பு.

இந்தக் காத்தவராயன் பிறப்புக்குக் காரண கர்த்தா/மூலகாரணமே நாரதர் தான் அப்படியிருக்க. அந்த நாரதர் பாத்திரம் இல்லாமலேயே ஒரு நாடகத்தை மேடையேற்றிய ஒரு பாடசாலைக்கு முதலாம் இடத்தை வழங்கியிருக்கின்றனர்.

இது எந்த வகையில் நீதியான ஒன்றாக இருக்கமுடியும். இன்று பல மூத்த கலைஞர்கள் தோன்றி. பாரம்பரிய கலைகளின் மேம்பாட்டிற்கும் வளர்ச்சிக்குமாக, பாடுபட்டு, பட்டுப்போயும், இன்னமும் பாடுபட்ட வண்ணமும் இருக்கும்.

இந்தக் காலகட்டத்தில் பாரம்பரிய கலைகளில் ஒன்றான காத்தவராயன் நாடகத்தின் கருப்பொருளையே திசைமாற்றி இந்த நாடகத்துக்கு 1 ஆம் இடம் வழங்கப்பட்டுள்ளதே. இது பாரம்பரிய கலைக்கு ஓர் இழிவாகும்.

காத்தவராயனின் பிறப்புக்கு ஆரம்பமே இல்லாத நாடகத்தின் முடிவை வைத்து எவ்வாறு தீர்ப்புக் கூற முடியும். இந்த நாடகம் எவ்வாறு ஒரு முழுமையான நாடகம் ஆகும். எதிர்காலத்தில் இப்பாரம்பரிய கலைகளை மேம்படுத்துவதற்காக இன்று ஆயத்தமாக களத்தில் ஒரு பாதத்தைப்பதித்த சிறுவர் மாணவர்களின் எண்ணமாகிய அரும்பை பொசுக்கிய பின் எவ்வாறு அடுத்த பாதத்தைப் பதிக்க இளம் சிறார்கள் விரும்புவார்கள்?

இவ்வாறு பாரம்பரிய கலைகளின் அழிவுக்கு பாரம்பரிய கலைகளை வளர்க்க வேண்டியவர்களே காரணமாக இருக்கிறார்களே! இது எவ்வாறு இருக்கின்றது தெரியுமா "பயிரைக் காக்க வேண்டிய, வேலியே பயிரை நாசம் செய்வது போல்" உள்ளது. இந்த நாடகத்தில் புலமை பெற்ற கலைஞர்கள் பலர் இன்று வாழ்ந்து கொண்டு தான் இருக்கிறார்கள். அவர்களில் ஒரு சிலரிடமாவது இந்த கருத்தைக் கூறி ஆராய்ந்து நல்ல முடிவாக எடுக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

**செ.வேணுகோபால்,** நீர்வேலி.

மே 1 ஆம் திகதி தொழிலாளர் தினம் கொண்டாடப்படுவதன் நோக்கம் பற்றி நாங்கள் அறியாதது அல்ல. ஒரு தொழிலாளி எட்டு மணித்தியாலயங்கள் தான் வேலை செய்ய முடியும் என்பதை வலியுறுத்தியதே- மே 1ஆம் திகதி.

அதற்கு மேல் வேலை செய்வதாயின் அதுவும் குறிப்பிட்ட அளவு நேரத்துக்கு மேல் மேலதிக வேலை செய்யமுடியாது. அதற்கும் மேலதிக கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும். அத்துடன் ஒரு தொழிலாளிக்கு மருத்துவ லீவு, அமைய லீவு என வழங்கப்படுவதும் வழக்கம்.

ஆனால், பாதுகாப்பு தொழில் செய்யும் ஒரு ஊழியரை பன்னிரண்டு மணித்தியாலம் வேலை செய்யுமாறும் அதற்கு மேலதிக கொடுப்பனவும் இல்லை என்றும், அத்துடன் லீவு எடுத்தால் அன்றைய சம்பளம் வழங்கப்படமாட்டாது என்றும் கூறுகிறார்கள்.


அதேநேரம் **E.P.F**, கழிக்கப்படுகிறது. அப்படியானால் லீவும் வழங்கப்பட வேண்டும் அல்லவா? ஒருநாள் சம்பளமாக **140/-, 160/-, 200/-** எனப் பல மாதிரியும் சம்பளம் வழங்குகிறார்கள். முக்கியமாக ஒரு இடத்தில் இரண்டு பாதுகாவல் ஊழியரை நியமித்து அவர்களை 12 மணி நேரம் வேலை செய்யுமாறு பணிக்கிறார்கள்.

அப்படி இருந்தும் ஒருவர் லீவு எடுத்தால் மற்றவர் தொடர்ந்தும் கடமைபுரிய வேண்டும் எனவும் கூறுகிறார்கள். அப்படியாயின் 36 மணி நேரம் ஒருவரால் கடமை புரிய முடியுமா? ஆகவே ஒரு இடத்துக்கு மூன்று பேரை நியமித்து எட்டு மணித்தியாலப்படி வேலையை வழங்கலாம்.

ஆகவே தொழில் திணைக்களச் சட்டப்படி இங்கு இயங்கும் பாதுகாப்புச் சேவைகள் நடைபெறவில்லை என்பதை தங்களின் மேலான கவனத்துக்கு கொண்டு வருகின்றேன் எனவே நீங்கள் இந்த பாதுகாப்புச் சேவையை நடாத்தும் உரிமையாளர்களை அழைத்து உரிய நடவடிக்கை எடுத்து என்போன்ற ஊழியர்களின் மன ஆதங்கத்தை நிறைவு செய்வீர்கள் என மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

**பாதிக்கப்பட்ட**
**பாதுகாப்பு ஊழியர்**

**குறிப்பு: "மக்களின் குரலும் குமுறல்களும்" என்ற இந்தப் பகுதிக்குரிய விடயங்களை யாரும் அனுப்பி வைக்கலாம். அனுப்பி வைக்கப்படும் விடயங்களுக்கு எழுதியவர்களே பொறுப்பு.**



மதிமுக பொதுச்செயலர் வைகோ உள்ளிட்ட எட்டுப் பேருக்கு எதிராக பொடா வழக்குகளை வாபஸ் பெற தமிழக அரசு முடிவுசெய்துள்ளது.

# வைகோ உட்பட எட்டுப் பேருக்கு எதிரான பொடா வழக்குகள் வாபஸ் பெறப்பட்டன

## தமிழக அரசு முடிவு

பூந்தமல்லியில் செயற்பட்டு வரும் பொடா சிறப்பு நீதிமன்றத்தில் இதற்கான மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக, நீதிமன்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதுபற்றி ம.தி.மு.க வட்டாரங்கள் கூறுகையில், பொடா சிறப்பு நீதிமன்றம்தான் இறுதிமுடிவு எடுக்க வேண்டும் என்று கூறினர். இந்த வழக்கு மீண்டும் ஓகஸ்ட் 26ஆம் திகதி விசாரணைக்கு வருவது குறிப்பிடத்தக்கது.

இதுபற்றி தமிழகத்தில் பாத யாத்திரை மேற்கொண்டுள்ள வைகோ ஒரு தனியார் செய்தி நிறுவனத்துக்கு அளித்துள்ள பேட்டியில் இது பற்றிய முழு விபரமும் இன்னும் தனக்குக் கிடைக்கவில்லை என்றும், இது நீதிக்குக் கிடைத்த வெற்றி என்றும் குறிப்பிட்டார்.

நாங்கள் கருத்து சுதந்திரத்திற்காக போராடிவருகிறோம். போராட்டம் வெற்றியடைந்துள்ளது என்று அவர் மேலும் கூறினார்.

மதுரை திருமங்கலத்தில் 2002 ஆம் ஆண்டு ஜுன் 20 ஆம் திகதி நடந்த பொதுக்கூட்டத்தில் விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசியதாக ம.தி.மு.க பொதுச்செயலாளர் வைகோ உள்ளிட்ட 8 பேர் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அதன் பின்னர் நீதிபதி சகாரியா தலைமையிலான பொடா மறு ஆய்வுக்குழு இந்த வழக்கை விசாரித்து வைகோ உள்ளிட்ட 8 பேர் மீது பொடா வழக்குத் தொடர எந்தவித முகாந்திரமும் இல்லை என்று தீர்ப்பளித்தது.

இதன் பின்னரும் பொடா மறு ஆய்வுக்குழுவின் தீர்ப்பை, பொடா சிறப்பு நீதிமன்றம் ஏற்கமறுத்தது. இதையடுத்து மறு ஆய்வுக்குழுவின் உத்தரவை அமுல்படுத்தக்கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது.

இதை சென்னை உயர் நீதிமன்றமும் ஏற்க மறுத்ததால் உச்ச நீதிமன்றத்தில் ம.தி.மு.க சார்பில் வழக்கு தொடரப்பட்டது. இதையடுத்து பொடா நீதிமன்றில் நடந்த விசாரணையை நிறுத்தி வைக்க உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்நிலையில் பொடா மறு ஆய்வுக்குழு உத்தரவை அமுல்ப்படுத்த அரசு தனது சட்டத்தரணிக்கு கடிதம் எழுதிவிட்டதாகவும், இனி அவர்தான் இதுபற்றி முடிவு எடுக்க வேண்டும் என்றும் தமிழக அரசு உச்ச நீதிமன்றத்திடம் தெரிவித்திருந்தது.

இது தொடர்பாக வழக்கு விசாரணை மீண்டும் வரும் 13 ஆம் திகதி உச்சநீதிமன்றத்தில் விசாரணைக்கு வர இருக்கும் நிலையில் தமிழக அரசு பொடா வழக்குகளை வாபஸ் பெறமுடிவு செய்துள்ளது.

## பறக்கும் பாவை



ஜெர்மனியின் முனிச் நகரில் ஆண்டு தோறும் மிகப் பெரிய அளவில் பாலே நடன நிகழ்ச்சி நடைபெற்று வருகிறது. பல்வேறு நாடுகளைச் சேர்ந்த நடனக்குழுவினர் இதில் கலந்து கொள்கிறார்கள்.

ரஷ்யாவின் சார்பில் 48 அழகிகளை கொண்ட நடனக்குழு இதில் கலந்துகொண்டது. அந்த குழுவினரின் நடன நிகழ்ச்சியில் பறவை போல், ஒரு அழகி சுழன்று ஆடிய காட்சி, ஓகஸ்ட் 22ஆம் திகதி வரை இந்த நிகழ்ச்சி நடைபெறுகிறது.

### ஆப்கான் ஜனாதிபதித் தேர்தல்

# இருபத்து மூன்று வேட்பாளர்களின் பெயர்களை தேர்தல் திணைக்களம் வெளியிடவுள்ளது

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் ஆப்கானில் இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ள 23 வேட்பாளர்களின் பெயர்களை ஆப்கான் தேர்தல் திணைக்களம் வெளியிடவுள்ளது.




இதில் தற்போதைய ஜனாதிபதி ஹமிட்ஹர்சாய் வேட்பாளர்களில் மிகவும் பிரபலமானவராக உள்ளார். ஆனாலும், இவருக்கு பலர் போட்டியாக அமையவுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

ஹமீட் ஹர்சாய்க்கு போட்டியாக இருப்பவர்களில் ஒருவர் ஆப்கானின் வடபகுதித் தலைவர்களில் ஒருவரான ஜெனரல் அப்துல் ரஸத் தொஸ்ரம் என்பவராவார். இவர் ஆப்கானின் வடபகுதியிலுள்ள உஷ்பெக் மற்றும் துக்மென் சிறுபான்மை இனங்களின் ஆதரவைப் பெறக்கூடியவர்.

மற்றையவர் ஹமீட்ஹர்சாயின் அமைச்சரவையின் முன்னாள் அமைச்சரான யூனுஸ் கூனி என்பவராவார். இவருக்கு ஆதரவாக தஜிகிஸ்தான் இனத்தைச் சேர்ந்த பாதுகாப்பு அமைச்சர் மொகமட் பாகீம், மற்றும் வெளிநாட்டு அமைச்சர் அப்துல்லா அப்துல்லா ஆகியோர் உள்ளனர். இவர்கள் இருவரும் 2001ஆம் ஆண்டு ஆப்கானில் ஆட்சி செய்து வந்த தலிபான்கள் வெளியேற முக்கிய காரணமாக இருந்தவர்கள்.

ஆய்வாளர்களின் கருத்துப்படி ஹமீட் ஹர்சாய்க்கு மிகவும் போட்டியாக இருக்கப்போகின்றவர் யூனுஸ் கூனியே எனத் தெரிவித்துள்ளனர்.

ஆப்கானின் ஜனாதிபதித் தேர்தல் விதிகளின்படி வேட்பாளர் ஒருவர் தேர்தலில் போட்டியிடுவதெனில் பத்தாயிரம் ஆதரவாளர்கள் உள்ளனர் என்பதனை அவர் நிருபிக்க வேண்டும். இவ்வாறு அவர் நிருபித்தால் அதனை ஐ.நாவுக்கான ஆப்கான் அதிகாரிகள் கண்காணிப்பர்.



# ஈராக்கில் வைத்து கடத்தப்பட்ட ஜோர்தான், லெபனானியர் விடுதலை

ஈராக்கில் வைத்து இஸ்லாமிய கிளர்ச்சிவாதிகளால் கடத்தப்பட்ட இரண்டு ஜோர்தான் நாட்டவர், இரண்டு லெபனான் நாட்டவரென நான்கு பேர் விடுதலை செய்யப்பட்டனர்.

ஜோர்தானின் பயாஸ் சாட் அல் உட்வான் தெரிவிக்கையில், தனது தந்தை தொலைபேசியூடாகத் தொடர்பு கொண்டு தானும், ஜோர்தானைச் சேர்ந்த மொகமட் அகமட் சலாமா அல் - மனாயா என்பவரும் விடுதலை செய்யப்பட்டதாகத் தெரிவித்தாரெனக் குறிப்பிட்டார்.

இவர்கள் விடுதலை செய்யப்பட்டது உறுதியானால், கடைசியாக ஈராக்கில் வைத்துக் கடத்தப்பட்ட ஜோர்தான் நாட்டவர்கள் இவர்களெனவும், இவர்களும் விடுதலை செய்யப்பட்டு விட்டனரெனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

லெபனானின் வடக்கு நகரமான திரிபோலியிலுள்ள நதா சாயோர் தெரிவிக்கையில் - தனது கணவர் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு தானும், தன்னுடன் இருந்த மற்றைய லெபனானியரும் விடுதலை செய்யப்பட்டதாகக் கூறியதாகத் தெரிவித்தார்.

ஆனாலும், நதா சாயோரின் கணவனுடன் விடுதலை செய்யப்பட்ட மற்றைய லெபனானியர் யாரென்பது தெரியவரவில்லையெனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மற்றையவர் நசீர் அல் ஜின்டி எனவும், இவரும் இவரது சகோதரருமான தகா என்பவரும் லெபனானிலிருந்து தமது லொறியில் மின்பிறப்பாக்கியொன்றைக் கொண்டு ஈராக்கிற்குச் செல்கையில், இஸ்லாமிய கிளர்ச்சிவாதிகளால் கடத்தப்பட்டனர்.

இவ்வாறு கடத்தப்பட்ட இரு சகோதரர்கள் தொடர்பான விபரங்கள் எதுவும் வெளிவரவில்லை. இதே வேளை லெபனானைச் சேர்ந்த வியாபாரியான அந்தோனி அன்ரன் என்பவரைக் கடத்திய கிளர்ச்சிவாதிகள் அவரைத் தொடர்ந்து தடுத்து வைத்துள்ளனர்.



### துருக்கியின் இஸ்தான்புல் நகரிலுள்ள

# இரண்டு ஹோட்டல்களில் குண்டு வெடிப்பு இருவர் பலி: எழுவர் காயம்!

துருக்கியின் இஸ்தான்புல் நகரத்தில் அமைந்துள்ள இரண்டு சிறிய ஹோட்டல்களில் இடம்பெற்ற குண்டு வெடிப்புக்களில் இருவர் கொல்லப்பட்டதுடன் ஏழுபேர் காயமடைந்தனர்.

இந்தத் தாக்குதல் ஒரு பயங்கரவாத நடவடிக்கையென பொலிஸ் உயரதிகாரி செலால்தீன் சேரா தெரிவித்த சிறிது நேரத்திற்குப் பின் இஸ்தான்புல்லில் அமைந்துள்ள காஸ் தொழிற்சாலைக்கு வெளியே இரண்டு குண்டு வெடிப்புக்கள் நடந்தன.

குண்டு வெடிப்பதற்கு பத்து நிமிடத்திற்கு முன்னர் அனாமதேய தொலைபேசி அழைப்பொன்று வந்ததாகவும் அதில் அனைவரும் விழிப்புடன் இருக்க வேண்டுமெனத் தெரிவித்ததாகவும், ஹோட்டல் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

முதலாவது ஹோட்டலில் குண்டு வெடித்த வேளை 37 விருந்தினர் இருந்தனர். மற்றய ஹோட்டலில் கிழக்கைரோப்பாவைச் சேர்ந்த 20 விருந்தினர்கள் இருந்தனர்.

பெருமளவு பயணிகள் முன்னாள் சோவியத் யூனியனிலிருந்து துருக்கிக்கு வருபவர்களெனவும், இவர்கள் அனைவரும் துருக்கியில் மலிவாக கிடைக்கும் துணிவகைகளைக் கொள்வனவு செய்து மீளவும் தமது நாடுகளுக்கு கொண்டு சென்று விற்பவர்களெனவும், இவர்களே இந்தக் ஹோட்டல்களில் தங்கியிருந்தவர்களெனவும் தெரிவிக்கப்படுகிறது.

காஸ் தொழிற்சாலைக்கருகில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் சேதங்கள் ஏற்படவில்லை எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த வருடம் நவம்பர் மாதம் ஒரே மாதிரியான நான்கு தற்கொலைக் குண்டு வெடிப்புக்கள் நடந்ததில் 60 பொதுமக்கள் பலியாகியிருந்ததும் அதன்பின்னர் அங்கு பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

# செங்கடலில் காணாமற்போன சுழியோடிகள் மீட்கப்பட்டனர்

### ............எகிப்தில் சம்பவம்

எகிப்தின் செங்கடல் பகுதியில் உல்லாசப்பிரயாணம் சென்றவேளை காணாமற்போன 12 ஐரோப்பிய சுழியோடிகள் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

ஐந்து பிரிட்டன் நாட்டவர், ஐந்து போர்த்துக்கீசர் மற்றும் இரண்டு பெல்ஜிய நாட்டவர்களே காணாமற்போய் கண்டு பிடிக்கப்பட்டவர்களாவர்.

கடந்த சனிக்கிழமை ஏனைய பத்துப்பேருடன் இந்தச் சுழியோடிகள் படகொன்றில் செங்கடலில் சென்று கொண்டிருந்தவேளை 12 சுழியோடிகளும் இடையில் கடலில் பாய்ந்துள்ளனர். இவ்வாறு சென்றவர்கள் தொடர்பாக எந்தவித தகவலும் கிடைக்கப் பெறவில்லையென எகிப்திய பொலிஸார் தெரிவித்தனர்.

பின்னர் இவர்கள் நீருக்கடியில் உள்ள இடத்தை ஹெலிகொப்டர் கண்டுபிடித்து மீட்புப் பணி படகிடம் தெரிவித்ததையடுத்து சுழியோடிகள் மீட்கப்பட்டனர்.

எகிப்தின் தலைநகர் ஹெய்ரோவிலிருந்து 330 கி.மீற்றருக்கப்பால் காணாமற்போன இவர்கள் அல் அக்காவெய்ன் தீவுப்பகுதியிலிருந்து 56 கி.மீற்றர் தூரத்துக்கப்பால் மீட்கப்பட்டு வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.


இந்தச் சுழியோடிகளில் இருவர் ஒன்றாகத் தம்மை இணைத்து செங்கடலில் பாய்ந்துள்ளனர். இவர் கள் பாய்ந்த கடற்பகுதி மிகவும் ஆபத்து நிறைந்ததென பி.பி.ஸி செய்தியாளர் தெரிவித்தார்.



செவ்வாய்க் கிரகத்தில் பாறைகள் மட்டுமல்லாது பாலைவனம் போல மணற்குன்றுகள இருப்பதையும் அங்குள்ள ரோவர் விண்கலம் படம் பிடித்து அனுப்பியுள்ளது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# கச்சதீவு கடற்பரப்பில் இலங்கை கடற்படையினரால் இந்திய மீனவர் சுட்டுக்கொலை



(இராமேஸ்வரம்)

தமிழகத்தின் இராமேஸ்வரத்தைச் சேர்ந்த மீனவர் ஒருவர் கச்சதீவுக் கடற்பரப்பில் இலங்கை கடற்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்றுக்காலை இடம்பெற்றது. 59 வயதான ராமு என்பவரே கடற்படையினரின் தாக்குதலில் மரணமடைந்தவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 4 பேர் கடலில் மீன் பிடிக்கச் சென்றிருந்தனர். இவர்களது படகு தலைமன்னாருக்கும் கச்சதீவுக்கும் இடையே சென்றுகொண்டிருந்தபோது, அந்தப் பகுதியால் ரோந்து வந்த இலங்கை கடற்படையினர் இவர்கள்மீது துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டனர். இதன்போது இந்த நபர் மரணமடைந்தார் மரணமடைந்தவரின் சடலத்தை இவருடன் வந்த ஏனைய 3 மீனவர்களும் இராமேஸ்வரத்திற்கு கொண்டு சென்றனர் இதனால் அந்தப் பகுதியில் பெரும் பதற்றம் ஏற்பட்டது

இதேவேளை-

இந்திய மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் எதுவும் செய்யவில்லை என்று இலங்கை கடற்படை அதிகாரி ஒருவர் கூறியதாக பாதுகாப்பு அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த மீனவர் இலங்கை கடற்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டதாக இந்திய மீனவர் சங்கத் தலைவர் போஸ் தெரிவித்தார்.

## விதார் ஹெல்கிசன் அடுத்த வாரம் வருகை!

(கொழும்பு)

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதான முயற்சிகளை மீளவும் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு - நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் தலைமையிலான ஏற்பாட்டாளர் குழு அடுத்த வாரம் கொழும்பு வரவுள்ளது.

விடுதலைப் புலிகளிடம் கையளிப்பதற்காக, தான் தயாரித்திருக்கும் மாற்று யோசனை குறித்து ஜனாதிபதி சந்திரிகா நோர்வே அரசுக்குத் தெரியப்படுத்தியதை அடுத்தே - நோர்வே குழுவினரின் இந்த விஜயம் இடம்பெறவுள்ளது.

கொழும்புவரும் நோர்வே தூதுக் குழுவினர், ஜனாதிபதி சந்திரிகா மற்றும் அரசதரப்புப் பிரதிநிதிகளைச் சந்தித்துவிட்டு - கிளிநொச்சிக்கு விஜயம்செய்து புலிகளுடன் பேச்சு நடத்தவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது ஜனாதிபதி சந்திரிகாவின் மாற்று இடைக்கால நிர்வாகத் திட்டத்தை நோர்வே தூதுக் குழுவினர் புலிகளிடம் கையளிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

## தமிழீழ தேசியத் துணைப்படை ஆட்சேர்ப்பு காலக்கெடு நீடிப்பு!

(கிளிநொச்சி)

தமிழீழத் தேசியத் துணைப் படைக்கு ஆட்சேர்ப்பதற்கான விண்ணப்பத் திகதி நீடிக்கப்பட்டுள்ளதாக தமிழீழ காவல்துறை அறிவித்துள்ளது.

தமிழீழ தாயகப் பிரதேசங்களில் வசிக்கும் 18 வயது முதல் 30 வயது வரையான தேக ஆரோக்கியம் உள்ள ஆண்-பெண் இரு பாலாரும் இதற்கு விண்ணப்பிக்க முடியும்.

தேசியத் துணைப்படையில் இணைய விரும்புபவர்கள் தங்கள் பிரதேசத்திலுள்ள காவல்துறை அலுவலகங்களிலோ அல்லது கிளிநொசசியில் அமைந்துள்ள காவல்துறை நடுவப் பணிமனையில் நேரில் வந்து இணைந்து கொள்ளலாம் என காவல்துறை ஆளணிப் பிரிவுப் பொறுப்பாளர் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்திலிருந்து இந்தப் படையணியில் இணைபவர்கள் விடுத்த கோரிக்கையை அடுத்து இந்தத் திகதி நீடிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - துணைப்படையில் இணையும் உறுப்பினர்களுக்கு மாதமொன்றுக்கு 8 ஆயிரத்து 500 ரூபா சம்பளம் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

(கௌ)

## 24 மணிநேரமும் மடு வீதி திறந்திருக்கும்!

மன்னார் - மடு தேவாலய உற்சவத்தை முன்னிட்டு, மடு சோதனைச் சாவடியூடான வீதிப்போக்குவரத்து எதிர்வரும் 17 ஆம் திகதி வரை 24 மணிநேரமும் இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

மடு உற்சவம் தற்போது நடைபெற்றுவருகிறது. எதிர்வரும் 15 ஆம் திகதி மடு பெருநாள் இடம்பெறவிருப்பதாலேயே மடு சோதனைச் சாவடியூடான வீதி 24 மணி நேரமும் திறக்கப்படவிருப்பதாகவும் -

இந்தமுறை சுமார் 2 லட்சம் பக்தர்கள் மடுவுக்கு வருகை தருவர் என எதிர்ப்பார்க்கப்படுவதாகவும் பாதுகாப்பு நடவடிக்கைச் செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## துப்பாக்கிச் சூட்டில் இளைஞர் படுகாயம்

### மட்டக்களப்பில் சம்பவம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கொம்மாந்துறை பகுதியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச்சம்பவத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்தார்.

கொம்மாந்துறையில் உள்ள உமாமில் வீதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில், கந்தையா புஸ்பராஜா என்ற இளைஞரே காயங்களுக்குள்ளானதாக தெரியவருகிறது.

இனந்தெரியாதவர்களின் துப்பாக்கிப் பிரயோகத்தில் காயமடைந்த இவர், சிகிச்சைக்காக மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## கோப்ரல் ராஜபக்ஷ வெலிக்கடைக்கு மாற்றம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சோமரத்ன ராஜபக்ஷ இன்று காலை வெலிக்கடை சிறைச்சாலைக்கு அனுப்பிவைக்கப் படவுள்ளார் என யாழ். சிறைச்சாலையின் பிரதம அதிகாரி இந்திரஜித் தெரிவித்தார்.

1996 ஆம் ஆண்டு காலப்பகுதியில் யாழ். குடாநாட்டில் காணாமற் போனவாகள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்காக யாழ். மேல்நீதிமன்றத்துக்கு வரவழைக்கப்பட்டிருந்த இவர், யாழ். சிறைச்சாலையிலேயே தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

தான் முதலில் தடுத்துவைக்கப்பட்டிருந்த வெலிக்கடைச் சிறையிலேயே மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு கோரி கடந்த வெள்ளிக்கிழமை முதல் இரண்டு நாட்கள் உணணாவிரதப் போராட்டத்தை அவர் நடத்தியிருந்தார்.

இதைத்தொடர்ந்து அவருக்கு அளிக்கப்பட்ட உறுதிமொழியை அடுத்து அவர் உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிட்டிருந்தார்.

இதன்பிரகாரம் இன்று அவர் வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு விமானம் மூலம் அனுப்பிவைக்கப் படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ப)

### அகதிகளை...

சந்திப்பின்போதே தமிழ்ச்செல்வன் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின்போது அவர் மேலும் தெரிவித்ததாவது -

தமிழகத்தில் தங்கியுள்ள ஈழத் தமிழ் அகதிகள் மிகவும் அபாயகரமான கடற்பயணத்தை மேற்கொண்டு வருகின்றனர். இவர்களின் இந்தப்பயணத்திற்கு எந்தவொரு நிறுவனமும் உதவவில்லை. அத்துடன், இவர்கள் தமது சொந்த முடிவின் பெயரிலேயே மீளவும் கடல்வழியாக தாயகம் திரும்புகின்றனர்.

எனவே, இவர்களுக்கான பயணத்தின்போது ஐ.நா.அகதிகள் அமைப்பு அனுசரணையாளராக இருக்கவேண்டும்.

ஐரோப்பிய நாடுகளிலுள்ள தமிழர்களைத் திருப்பி அனுப்பும் முயற்சிகளில் அந்த நாடுகள் ஈடுபட்டுள்ளன.

இங்கு ஒரு நிரந்தரத்தீர்வு ஏற்படும்வரை அவர்களைத் திருப்பி அனுப்பக்கூடாதென இந்த நாடுகளை ஐ.நா.வின் அகதிகள் அமைப்பு கேட்கவேண்டுமெனவும் தமிழ்ச்செல்வன் கேட்டுக்கொண்டார்.

இவற்றைக் கேட்டுக்கொண்ட நீல்றைட் இந்த இரு விடயங்கள் தொடர்பாக கூடிய கவனம் செலுத்துவதாகத் தெரிவித்தார். அத்துடன் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் இடம்பெற்றுவரும் அண்மைக்கால வன்செயல்கள் மற்றும் சிறுவர் பாதுகாப்புத் தொடர்பாகவும் ஆழமாகக் கலந்துரையாடப்பட்டது.

நேற்றைய சந்திப்பில் மனித உரிமைகள் ஆலோசகர் றோறி மன்கோவன், வடக்கு - கிழக்கு மனிதஉரிமை அமைப்பின் செயலகத்தின் நடவடிக்கைகள் தொடர்பாக கேட்டபோது- அது தொடர்பாக புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் விளக்கமளித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் எட்வேட் பென்சன், கீசுகி முராதா, கள அலுவலர் யாழ்ப்பாணம், கேட்பெரி யுனிசெவ் கிளிநொச்சி ஆகியோர் கலந்துகொண்டனர்.

### அமெரிக்க...

மிதிவெடிச்செயற்பாட்டலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலில் யாழ்.மாவட்ட மேலதிக அரசஅதிபர் அ.சிவசுவாமி, யாழ்.மிதிவெடிச் செயற்பாட்டலுவலக அலுவலர் செந்தில்குமார் போன்றோர் கலந்து கொண்டனர்.

இந்த அமெரிக்கக் குழுவினர் இன்று வவுனியாவில் வெடிபொருள் அகற்றும் செயற்பாடுகள் குறித்து ஆராய அங்கு செல்லவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ப)

## பல்கலை.மாணவர்களிடையேயான மோதலில் மூவர் காயமடைந்தனர்!

யாழ்.பல்கலைக்கழகக் கலைப் பீட நான்காம் வருட மாணவர்களால் தாக்கப்பட்ட இரண்டாம் வருட மாணவத் தலைவர் உட்பட மூவர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றது. சம்பவத்தின்போது இரண்டாம் வருட மாணவர் தலைவர் றொகான் உட்பட மூவர் காயமடைந்ததாகத் தெரியவருகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

யாழ். பல்கலைக்கழக முன்றலிலுள்ள கல் ஆசனத்தில் அமர்ந்திருந்த இரண்டாம் வருட மாணவர்களுக்கும், நான்காம் வருட மாணவர்களுக்கும் இடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கமே இந்த முறுகல் நிலைக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. காயமடைந்த இரண்டாம் வருட மாணவன் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

## ஆர்ப்பாட்டப் பேரணி

தேர்தல் காலத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினால் பொது மக்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றக்கோரி- லங்கா சமசமாஜக்கட்சி, இலங்கை தொழிலாளர் சம்மேளனம், அரச தொழிலாளர்களின் சம்மேளனம் ஆகியன இணைந்து ஒழுங்கு செய்துள்ள ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நாளை மாலை 4.30 மணிக்கு கொழும்பு கிங்ரன் சதுக்கத்தில் இடம்பெறவுள்ளது.

### ஈ.பி.டி.பி...

அந்த இடத்திலேயே மரணமானதாகவும் அங்கிருந்த கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

கொல்லப்பட்ட பாண்டியன் ஈ.பி.ஆர்.எல்.எவ் இயக்கத்தில் இருந்து பின்னர் ஈ.பி.டி.பியுடன் இணைந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (4)

### கொழும்பிலுள்ள...

யறையின்றி மூடப்பட்டுள்ளது.

தூதரகத்துக்கு அருகில் வேறொரு கட்டடத்தில் இயங்கி வரும் அமெரிக்க நிலையம், நூலகம், யு.எஸ்.எயிட் நிறுவன அலுவலகம் என்பனவும் மூடப்பட்டிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை நேற்று நண்பகல் 2 மணியளவில் அமெரிக்கத் தூதரகம் திடீரென மூடப்பட்டமைக்கு, தூதரக அலுவலர் ஒருவருக்கு தபால் மூலம் இனந்தெரியாத வெள்ளை நிறத்தூள் அனுப்பப்பட்டதே காரணம் எனத் தெரியவருகிறது.

இந்த வெள்ளைநிறத் தூளுடன் 'அந்திராக்ஸ்' கிருமிகள் இருக்கலாமெனக் கருதியே உடனடியாகத் தூதரகத்தை மூட உத்தரவிடப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

### களுவாஞ்சிக்குடியில்...

இடைவழியிலேயே இவர் உயிரிழந்துள்ளதாக தெரியவருகிறது.

இந்தச் சம்பவம் குறித்த - மேலதிக விபரங்கள் எதுவும் நேற்று நள்ளிரவுவரை வெளியாகவில்லை.


## நமது ஈழநாடு விளம்பரக் கட்டணங்கள்

| அளவு | கறுப்பு/வெள்ளை | கலர் |
|---|---|---|
| முழுப்பக்கம் | ரூபா 10,000 | ரூபா 22,000 |
| அரைப்பக்கம் | ரூபா 5,000 | ரூபா 12,000 |
| கொலம் செ.மீ Colum cm | ரூபா 50 | ரூபா 120 |

## மரண அறிவித்தல்

7cm x 2 கொலம் (colum) அளவுடைய மரண அறிவித்தல் விளம்பரங்கள் இலவச-மாகவே பிரசுரிக்க ஏற்றுக்கொள்ளப்படும். அதற்கு மேற்பட்ட அளவுக்கு மட்டுமே கட்டணம் அறவிடப்படும்.

புதுப்பொலிவுடன் யாழ்ப்பாணத்தில்
FedEx Express
விரைவானது பாதுகாப்பானது நம்பகமானது
இப்பொழுது உலகின் எப்பாகத்திற்கும் விரைவாக பொதிகள், கடிதங்களை அனுப்பிட நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்
THIRUMURUGAN COM NET
Opposite Diolag phone shop
259,கே.கே.எஸ் றோட்,
யாழ்ப்பாணம்.
T.P: 021 222 7835
Fax:021 222 7836 E.mail:thirumurugan5@lycosmail.com
பலநோக்கு கூ.ச.முன்பாக
46, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்
T.P: 021 222 7560
Fax:021 222 7310


இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 11.08.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.